## தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) இந்த அறிக்கையின் 1.5 மற்றும் 1.6 பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(ஆ), 1.6.2.1(இ), 1.6.2.2(ஆ), 2.5(இ) பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் கட்டுநிதி மீதி ரூபா 2,841.67 மில்லியனாக இருந்த போதும் அலுவலகத்தின் புத்தகங்களின் பிரகாரம் கட்டுநிதி மீதி ரூபா 4.18 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,837.49 மில்லியான | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டுநிதி சீராக்க கணக்கொன்று பேணப்பட வேண்டும். | தற்போது சீராக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | வேறுபாடொன்று காணப்பட்டது. அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) பந்தியின் பிரகாரம் அவ்வேறுபாடு கட்டுநிதி சீராக்க கணக்கில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | மேற்படி அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடும் போது சொத்துக்களுக்குரிய பிரதான பேரேட்டு மீதிகளுடன் தனி மீதிகள் இனங்காணப்படும் வரை அப்பெறுமதி நாட்குறிப்புக்கள் மூலம் பிரதான பேரேட்டு மீதி திருத்தம் செய்யப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களுக்குரிய பிரதான பேரேட்டு மீதிகளுடன் தனி மீதிகள் பரீட்சிக்கப்பட்டு வேறுபாடொன்று இருந்தால் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாத சொத்துக்கள் அதிகளவில் கணக்கீடு செய்யப்பட்டன. மேலும் மாற்றப்பட்ட உருப்படிகளும் சீராக்கம் செய்யப்பட்டன. மேலும் வேறுபாடுகள் காணப்படுகின்ற மீதிகள் 2020 ஆம் ஆண்டின் போது சரி செய்வதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. |

## 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

### 1.6.2.1 நிதிச் செயலாற்றல் கூற்று

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி இறுதி கணக்கு கூற்றின் பிரகாரம் 05 வைப்புக் கணக்குகளில் வைப்புக்களின் பெறுவனவுகளின் மொத்தம் மற்றும் வைப்புக் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 461,329,627 தொகை மற்றும் ரூபா 306,566,379 ஆக இருந்தது. நிதி செயலாற்றல் கூற்றில் அப்பெறுமதிகள் முறையே ரூபா 418,861,724 மற்றும் ரூபா 284,490,968 குறைத்து முறையே ரூபா 42,467,903 மற்றும் ரூபா 22,075,411 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்ட தவறினால் வைப்புக்கள் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தர் களுக்குரிய வருமான குறியீடுகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ஏனைய பெறுவனவுகளை கணக்கீடு செய்யப்பட்ட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது இவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 161,167,234 ஆன வருமானத்தில் ரூபா 18,013 குறைத்து ரூபா 161,149,221 தொகை ஏனைய பெறுவனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கணக்குகள் தயாரிக்கும் போது தாமதத்தினால் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. |
| (இ) | செலவின விடயங்களின் நிதி ஏற்பாடுகள் மிகைப்பனவு தவிர்ப்பதற்காக தலைப்பிலிருந்து செலவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 197,615 ஆன செலவினம் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் 02 சந்தர்ப்பங்களில் ஏனைய தலைப்புக்களின் செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இனன் பிரகாரம் இயலுமானவரை முழுமையாக மதிப்படு தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் பார்த்துக் கொள்ளல் வேண்டும் | நிர்வாக செலவினத்திலிருந்து செலவிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு உரிய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

**1.6.2.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ---------------- | ------------------------------------------------------ |
| (அ) | முன்னைய ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 217,484,429 ஆக இருந்தது. அம்மீதிகளின் கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் 2019 சனவரி 01 இல் மீதிகளின் கூட்டுத் தொகையாக ரூபா 134,370,756 கூடுதலாக ரூபா 351,855,185 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆரம்ப மீதியாக 2019 நவம்பர் 30 இல் உள்ளவாறான மீதி தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்ததாக அறவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டின் நிதிநிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த நடைமுறை யல்லாத சொத்துக்கள் குறியீடு 12 இன் கீழ் மீதியாக ரூபா 976,293,611 குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்று தொடர்பான கூற்றில் அந்த 12 குறியீடுகளுக்குரிய 2019 சனவரி 01 இல் உள்ளவாறு மீதியாக ரூபா 1,950,534,023 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டின் இறுதி மீதிக்கு மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கு இடையே ரூபா 974,240,412 ஆன வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. இவ்வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிச் சொத்துக்கள் 2018 திசெம்பர் 31 இல் கணக்கீடு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் அப்பெறுமதி ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். ஆதலால் கணக்கில் 2018 திசெம்பர் 31 இறுதிப் பெறுமதிகள் மற்றும் 2019 சனவரி 01 இல் பெறுமதிகள் வேறு பெறுமதிகளை எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளாக ரூபா 4,177,955 குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த எண்ணிக்கைக்குரிய ஏசீஏ 3 மாதிரியின் பிரகாரம் காசு மீதியொன்று காணப்படவில்லை. அத்துடன் அம்மீதிகளில் ரூபா 3,277,077 ஆன தீர்வு செய்யப்படாமல் தேர்தல்கள் முற்பணம் மற்றும் 2013 ஆம் ஆண்டிலிருந்து தீர்வு செய்யப்படாதிருந்த வெளித்தரப்பினர் களிடமிருந்து கிடைக்க வேண்டியதாக இருந்த ரூபா 900,878 தொகையைக் கொண்டிருந்தது. அப்பெறுமதி நிதிச்சொத்துக்களின் கீழ் கிடைக்க வேண்டிய முற்பணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | - |

**1.6.2.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது ஏனைய பெறுவனவுகளாக ரூபா 161,167,234 கிடைத்திருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 18,013 குறைத்து ரூபா 161,149,221 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங் காணப்பட்டு சரியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்ட தவறினால் பெறுவனவு மீதிகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (ஆ) மீளாய்வாண்டின் முற்பண பெறுவனவுகள் ரூபா 29,507,806 மற்றும் வைப்புக்களின் பெறுவனவு ரூபா 132,572,422 காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையே முதலீட்டு செயற்பாடுகளின் உருவான காசுப் பாய்ச்சல் மற்றும் நிதிச் செயற்பாடுகளினால் உருவான காசுப்பாய்ச்சல் காண்பிக்க வேண்டியிருந்தது. எனினும், அப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 162,080,228 ஆக இருந்த போதும் அது ரூபா 18,013 கூடுதலாக ரூபா 162,098,341 என செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காய்ச்சல் பிரதான பேரேட்டு பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளுக்கு காரணம் இனங் காணப்பட்டு சரியாக கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்ட தவறினால் பெறுவனவு மீதிகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (இ) மீளாய்வாண்டின் முற்பணம் மற்றும் வைப்புக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 39,937,278 மற்றும் ரூபா 306,566,379 என மொத்தம் ரூபா 346,503,657 ஆக இருந்தது. முற்பண கொடுப்பனவு முதலீட்டு செயற் பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலிலும் வைப்புக் கொடுப்பனவு நிதிச் செயற்பாடு களுக்காக செலவிடப்பட்ட தொகை காசுப்பாய்ச்சலிலும் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அம்முழு பெறுமதியில் ரூபா 312,339,673 குறைத்து பிரதான பேரேட்டு | காசுப்பாய்ச்சல் கூற்று அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்ட தவறினால் வைப்பு கொடுப்பனவு மீதிகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவின் கீழ் செயற்பாட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலில் ரூபா 39,932,278 என குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) நிதிக்கூற்றுக்களில் ஏ சீ ஏ -சீ மாதிரி யில் முன்னைய ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ரூபா 332,179,777 தொகையான பிரதான பேரேட்டு செலவினம் மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 67,470,938 என குறைத்து ரூபா 264,728,839 என குறிப்பிடப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்று அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் 2018 இன் நிதிக்கூற்றுக்கள் சரி செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு சரி செய்யப்பட்ட பெறுமதிகள் 2019 நிதிக்கூற்றுத் தொகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்ட பதிவேடுகள் பேணப்படாதிருந்ததாக தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) சேதங்கள் பதிவேடு | | |
| நுவரெலியா மற்றும் அம்பகடுவ பிரதேச செயலகங்களால் நடாத்தப்பட்டிருந்த சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடுகள் கணக்காய்வு திகதி வரை 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி அளவில் நாளதுவரையாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவு நாளது வரையாக்கப்பட பேணப்பட வேண்டும். | சேதங்கள் தொடர்பாக மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருந்தும் இந்த நட்டங்கள், சேதங்கள் மாவட்ட செயலகத்தில் நாளதுவரையாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேச செயலகத்திலும் பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டுள்ளதாகஅறிக்கையிடப்பட்டிருந்தது. |

(ஆ) விடுமுறை பதிவேடு
---------------------------------

| | | |
|---|---|---|
| நுவரெலியா மற்றும் கொத்மலே பிரதேச செயலகங்களினால் பொது 190 ஆம் மாதிரியின் பிரகாரம் விடுமுறை பதிவேடு நாளது வரையாக பேணப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 பிரிவின் பிரகாரம் விடுமுறைப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட வேண்டும். | இது தொடர்பாக உள்ளக கணக்காய்வு பிரிவிடம் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பின்னர் தற்போது இவ் விடயங்களின் கடமைகள் நாளதுவரையாக பேணிச் செல்வதாக அறிக்கையிடப் பட்டிருந்தது. |

(இ) பெறுகை குழு உறுப்பினர்களின் வருகை பதிவேடு
------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| நுவரெலியா பிரதேச செயலகத்தின் பெறுகை குழு உறுப்பினர் வருகை பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை குழு செயலாளரினால் பெறுகை குழு உறுப்பினர்களின் வருகை பதிவேடு பேணப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் பதிவேடொன்றை பேணுவதற்கு பராமரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**
---------------------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்கு போதியளவிலான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சமூக அடிப்படையிலான பசுமை சமூக கழகங்களை community based green clubs" உருவாக்குவதற்காக 3 பிரதேச செயலகங்களுக்கு 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதி தேசிய பாதீட்டு திணைக்களத்திலிருந்து 260-1-1-0-2509 செலவின விடயத்திற்காக ரூபா 4,050,000 குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. எனினும், அந் நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீடு ஒதுக்கீட்டு நிதிஏற்பாடு | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 260-1-1-0-2509 செலவின விடயத்தின் கீழ் ரூபா 4,050,000 நிதி ஏற்பாடு அளவு பொது செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆகஸ்ட் மாத திறைசேரி மாதாந்த கணக்கு அறிக்கை பரிசோதனைகளின் போது எம்மால் இனங்காணப் பட்டுள்ளதுடன் அந்நிதி ஏற்பாடு தொடர்பாக ஆராய்ந்து பார்த்த போது பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்படுவதற்கு இனங்காணப்பட்ட "Community |

| | | | |
|---|---|---|---|
| | கோருவதற்குரிய தகவலில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | based green clubs" செயற்திட்டத்திற்கானது என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 3,000,000 ஆன நிதிஏற்பாட்டின் பேரில் கர்கஸ்வேல்ட் கீழ் பகுதி பாலம் நிர்மாண செயற்திட்டத்தின் கையிலுள்ள பட்டியலாக ஒப்பந்தக்காரரின் ஆரம்ப கேள்வி தொகையே குறிப்பிடப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், அளவீட்டு பத்திரத்துடன் கையிலுள்ள பட்டியல் சமர்ப்பிக்கப்படாமையால் அளவீடுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | பட்டியல் சமர்ப்பிக்கும் போது கட்டாயமாக அளவீட்டுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரை பாலத்தின் வேலைப் பகுதிகளில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள காரணத்தினால் செய்யப்பட வேண்டிய வேலை பகுதிகளுக்காக பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு கையிலுள்ள பட்டியலொன்றாக நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் 2020 மார்ச் 06 ஆந் திகதி வரையில் சில வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததாக ஏற்றுக்கொள்வதுடன் தற்போது அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | | |
| (i) XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | - | ஓவ்வொரு உத்தியோகத்தராலும் பதிவு செய்யப்படுகின்ற விடுமுறை தினத்தின் முன்னால் அதிகாரமளிக்கப்பட்ட | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | உத்தியோகத்தரால் விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்ட போதும் விடுமுறை விண்ணப்பங்களை துரிதமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர் ஒருவரால் தனது கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்படாத 38 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | வேண்டும். | அங்கீகரித்து வழங்காமையால் இக்குறைபாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | XLVII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவு | - | ஒவ்வொரு ஆரம்ப பரிசோதனையும் தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டிய போதும் கம்பகமுவ பிரதேச செயலகத்தின் 05 ஆரம்ப விசாரணை 03 மாதங்கள் முதல் 03 ஆண்டுகள் வரையான வீச்சில் தாமதமாக்கப் பட்டிருந்தன. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பரிசோதனைகளின் பரிந்துரைகளை செயற்படுத்தாத சந்தர்ப்பங்கள் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வும் ஏனைய புலனாய்வுகளை விரைவில் மேற்கொண்டு பூர்த்தி செய்வதெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (iii) | XIX ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | | அரசின் வீடுகளுக்கு இதற்கு 06 ஆண்டு களுக்கு முன்னர் மதிப்பீடு செய்யப்பட்ட சிக்கன வாடகை அடிப்படையில் அவ்வீடுகளில் வசிக்கும் உத்தியோகத்தர்களிடமி ருந்து வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. அம்மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வீட்டு வாடகையாக உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தன. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது சிக்கன வாடகை அறவிடப்படும் அரசின் சேவை வீடுகளுக்கு உரியதாக மீண்டுமொருமுறை பிரதான மதிப்பீட்டாளரிடம் இருந்து மதிப்பீட்டு அறிக்கையை கோருவதற்கும் அதன் பிரகாரம் சிக்கன வாடகையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது |
| (iv) | தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLIII ஆம் அத்தியாயத்தின் 24 ஆம் பிரிவு | - | ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் மூன்று உத்தியோகத்தர் களுக்கு முழு சேவைக் காலத்தில் அரச வீடுகளின் உரித்தினை இல்லாமல் ஆக்கும் தண்டனை அறவிடப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அந்த உத்தியோகத்தர்கள் கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட வில்லை. அவர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மூன்று பேரால் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தாகவும் இந்த விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு மற்றும் அந்த உத்தியோகத்தர்களின் இணக்கப்பாட்டுடன் இரண்டு வீடுகளை மீண்டும் பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (v) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | - | அரச வீடொன்றில் பயன்படுத்திய நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றிற்காக கட்டணங்களை அதில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்கள் குடியிருக்கும் 07 வீடுகளுக்கு நீர்மானி மற்றும் மின்மானி பொருத்தப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீடுகளில் குடியிருப்போரிடமிருந்து இதுவரை, நீர் மற்றும் மின்மானிகளின் இலக்கங்களை வழங்குமாறு அறிவித்து கடிதம் அனுப்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (vi) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.4 ஆம் பிரிவு | - | தங்கியிருப்போர் அல்லாத நபர்கள் அரச உத்தியோகத்தர்களின் வீடுகளில் இருந்த மூன்று உத்தியோகத்தர் களுக்கு வதிவிலிருந்து வெளியேறுமாறும் அவர்களை கறுப்பு பட்டியலில் இடுவதாக அறிவித்து கடிதம் அனுப்பியிருந்த போதிலும் 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி வரை அந்த உத்தியோகத்தர்கள் வெளியேறியிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தர் களுக்கு அனுப்பிய கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அந்த உத்தியோகத்தர்களை கறுப்பு பட்டியலில் உட்படுத்தவில்லை எனவும் அம்மூன்று பேரும் மேன்முறையீடு செய்துள்ளதாகவும் அவற்றின் விடயங்களை கருத்திற் கொண்டு மற்றும் அந்த உத்தியோகத்தர்களின் இணக்கத்துடன் இரண்டு வீடுகளை பொறுப்பேற்றதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vii) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.7 ஆம் பிரிவு | - | அரசின் வீடுகளில் நீர் கட்டணங்கள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் கொடுப்பனவின் போது தற்போது அரசின் வீடுகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும். நுவரெலியா மாவட்ட செயலகத்தில் அரசின் வீடுகளில் பல வருடங்களுக்கு முன்னர் குடியிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களின் பெயரில் மின்சாரப் பட்டியல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 மே 01 ஆந் திகதி வரையில் அவ்வாறு செய்யப்பட்டிருந்த பதிவின் பின்னரான உத்தியோகத்தர்களின் பெயர்கள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசின் வீடுகளில் நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்கள் தற்போது அரசின் வீடுகளில் குடியிருக்கும் உத்தி யோகத்தர்களின் பெயரில் பதிவு செய்யுமாறு உரிய உத்தியோகத்தர்களுக் கு 2020 சனவரி 07 ஆந் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (viii) | XIX அத்தியாயத்தின் 3 மற்றும் 4.3.4 ஆம் பிரிவுகள் | - | மாவட்ட செயலகத்தினால் 06 வகை வீடுகளின் கீழ் வெவ்வேறு அரசின் வீடுகளில் குடியிருப்பதற்காக உத்தியோகத்தர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட காத்திருக்கும் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீடுகளை தரப்படுத்துவதற்காக வெவ்வேறாக காத்திருக்கும் பதிவேடு தயாரிக்கப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ix) | தாபனவிதிக் கோவையின் 11 தொகுதியின் XLIII ஆம் அத்தியாயத்தின் 24 ஆம் பிரிவு | - | கொத்மலை பிரதேச செயலகத்தின் அனுமதிப்பத்திர வழங்கும் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திர பெறுமதியை உரிய உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னைய ஆண்டில் ரூபா 69,500 ஆன அனுமதிப்பத்திர வருமானங்களுக்குரிய தகவல்கள் முறைமையிலிருந்து அகற்றப்பட்டு மேற் கொள்ளப்பட்டிருந்த நிதி மோசடி தொடர்பாக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வேண்டும். | களிடமிருந்து அறவிட பரிந்துரைக்கப் பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறவிக்கப்பட்டிருந்தது |
| (x) | தாபன விதிக் கோவையின் 11 ஆம் தொகுதியின் அரச உத்தியோகத்தர் களினால் மேற்கொள்ளப்ப டும் தவறுகள் தொடர்பாக முதலாவது அட்டவணையின் 14 ஆம் பிரிவு - | கொத்மலே பிரதேச செயலகத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் கடமைகளை தவிர்ப்புச் செய்தமை / சனாதிபதி தேர்தல் கடமைகளை பகிஷ்கரித்தமை மற்றும் அறிவித்தல் விடுவிக்காமல் விடுமுறை பெற்றுக் கொண்ட காரணத்தினால் 2019 நவம்பர் மாதத்தில் சம்பள கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக ஆரம்ப பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கம்பெரலிய செயற்திட்டத்தின் நடவடிக்கை பூர்த்தி செய்தல் மற்றும் தேர்தல்களை நடாத்துவதற்குரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு கையளிக்கப் பட்டிருந்தமையால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் நிறுவனத்தின் நடவடிக்கைகளை செயற்திறனாக மற்றும் முறைப்படுத்த எடுத்த தீர்மானம் அல்லாமல் தாபன விதிக்கோவையின் ஏற்பாடு வேண்டுமென்றே மீறப்பட்டு செயற்படுவதற்கு எடுத்த தீர்மானம் ஒன்றல்ல என குறிப்பிடப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

-----------------------------

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 138(1) | 314,875 | நுவரெலியா மற்றும் கொத்மல பிரதேச செயலகங்களில் 14 சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட செலவினங்கள் குறித்த செலவின விடயங்களுக்கு வரவு வைக்காமல் ஏனைய செலவினத் விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 260 செலவின தலைப்பின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு போதியளவு இல்லாமை காரணமாக 2019 ஆம் ஆண்டில் வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை செயற் படுத்துவதற்காக மூலதன செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் செலவிடக்கூடிய நிர்வாக செலவினங்களில் இருந்து இந்த அத்தியாவசிய செலவினம் மேற் கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 139 | 138,748 | அம்பகமுவ, கொத்மலே மற்றும் வலப்பனே பிரதேச செயலகங்களில் 15 சந்தர்ப்பங்களின் போது செலவினங்கள் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொத்மலே<br>----------------<br>பிரயாணச் செலவினம் கோரும் போது வெளிக்கள கடமை முறையாக மேற்கொள்ளப் பட்டதாக உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வலப்பனே<br>------------------<br>செலவின விபரங்களை உறுதிச் சீட்டுக்களில் குறிப்பிடுமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டிருந்தது<br><br>அம்பகமுவ<br>--------------------<br>அந்நாட்களில் காணப்பட்ட பல செயற்பாடுகள் காரணமாக குறித்த உறுதிச்சீட்டுக்களில் அதற்கு சமூகமளித்தவர்களின் பதிவேடு இல்லையென ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>------------------------------------ | | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் வெளியேறிச் செல்லல் மற்றும் கடமை விடுமுறை அங்கீகரிக்கப்படாமல் நுவரெலியா பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் 290 சந்தர்ப்பங்களில் வெளியேறிச் சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலகத்திலிருந்து வெளியே செல்லும் போது முறையான அனுமதியொன்று அடிப்படையில் வெளியேறிச் செல்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டு செல்ல வேண்டுமென உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ii) | 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | | நுவரெலியா பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் 55 சந்தர்ப்பங்களில் தாமதமாக வருகை தந்திருந்த போதும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விடுமுறை விடயத்தில் கடமைகள் முறையாக்கப் பட்டுள்ளதாகவும் தாமதமான வருகைக்காக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அவர்களின் விடுமுறைகளிலிருந்து அத்தாமதங்களுக்காக விடுமுறை கழிக்கப் பட்டிருக்கவில்லை. | | விடுமுறை பதிவு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குரிய 02 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குழாம் வாகனங்கள் மற்றும் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனம் என்பவற்றின் எரிபொருள் பரிசோதனை கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமை காரணமாக தாமதம் அடைந்திருந்ததுடன் அவ்விடயங்களை கணக்காய்விற்கு அறிக்கையிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (iv) | 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய 20/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கொத்மல பிரதேச செயலகத்தில் சம்பளம் பெற்றுக் கொள்ளாத இரண்டு பயிலுனர் உத்தியோகத்தர் களுக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக இணைந்த படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக அறிவுறுத்தல் கிடைக்கும் வரை பட்டதாரி பயிலுனர்களுக்கு இணைந்த படிகள் கொடுப்பனவு செய்து நிறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | ஓய்வூதிய சம்பள சுற்றறிக்கை | | | | |
| (i) | 2006 திசெம்பர் 15 ஆந் திகதிய 19/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் ஓய்வூதிய திணைக்கதளத்தி னால் | 158,692 | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாமையால் நுவரெலியா, வலபனே மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகங்களில் கிராம சேவையாளர்களால் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டரீதியான கடமைகளை நிறை வேற்றாமை தொடர்பாக குறித்த கிராம சேவையாளர் களுக்கு எச்சரிக்கை விடுத்து கடிதமொன்று வழங்கப்பட்டுள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ள ஓய்வூதிய செயற்பாடு தொடர்பான கிராம சேவையாளர் கைநூலின் 6.2 ஆம் பந்தி | | ஓய்வூதியம் பெறுவோரின் பதிவேட்டில் இடம் பெறும் மாற்றங்கள் பிரதேச செயலகங்களுக்கு அறிக்கையிடல் 07 நாட்களுக்கு மேல் தாமதப்படுத்துவதால் 08 சந்தர்ப்பங்களில் கூடுதலான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 158,692 தொகை 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | | துடன் வட்டார தினத்தில் கிராம சேவையாளர்களுக்கு இது தொடர்பாக அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2009 சனவரி 07 ஆந் திகதிய 01/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நுவரெலியா பிரதேச செயலகத்தின் வலது குறைந்தோர் ஓய்வூதியப் பெறும் 3 பேரின் பரிசோதனை அறிக்கையின் பிரதியொன்றும் மருத்துவ சபை பரிந்துரைகள் நுவரெலியா மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகங்களில் 12 வலது குறைந்த ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஆதரவளிப்பதாக கிராம சேவையாளரால் வழங்கப்படும் மும்மாத அறிக்கை கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு உத்தியோகத்தர் மூலம் மாத்திரம் 225 ஓய்வூதிய கோவைகளின் செயற்பாடுகளை மேற்கொள்ளாத காரணமாக செயற்பாடுகள் அதில் என்பதால் இச்செயற்பாடு தாமதமாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (iii) | 2011 யூன் 14 ஆந் திகதிய ஓய்/சுற்றறிக்கை/ 2011 ஆம் இலக்க சுற்றறிக்கை கடித இலக்கம் 02 | 1,540,211 | நுவரெலியா பிரதேச செயலகத்தில் 08 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்படாத ஓய்வூதியம் பொது வைப்புக் கணக்கில் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது அவ்வாறு கால தாமதம் இன்றி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைப்புச் செய்யப்பட்டு காலதாமதத்துடன் ஓய்வூதிய பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை<br>------------------------------------<br>2016 நவம்பர் 24 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MC-v ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2015 யூலை 07 மற்றும் 2016 சனவரி 06 ஆந் திகதிய BD/ GPS/130/9/14/MC-ii ஆம் இலக்க கடிதம் - | மோட்டார் சைக்கிள் பெறுவோர் பதவியில் இருந்து பல்வேறு காரணங்களுக்காக பதவிகள் கிடைக்காததன் பேரில் அம்பகமுவ மற்றும் ஹங்குரன்கெத பிரதேச செயலகங்களில் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து முறையே 2019 மே மற்றும் செப்தெம்பர் மாதங்களில் அறவிடப்பட்ட பணம் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி வரை தேசிய பாதீட்டு பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு விசாரணையின் பின்னர் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் வரை அறவிடப்பட்ட பணத்தை பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாக அறிய தருகின்றோம். |

**1.6.6 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

---------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காத வகையில் செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| கணக்காய்வு அவதானிப்பு<br>------------------------------------------ | பரிந்துரை<br>------------- | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>--------------------------------------- |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உழைக்கும் போதே செலுத்தும் வரிச் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு தடவையில் செலுத்தப்படும் உபகாரப் படிகள் போன்றவற்றிற்காக உழைக்கும் போதே செலுத்தும் வரி அட்டவணை 02 (Tables) இன் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். கம்பெரலிய துரித கிராம அபிவிருத்தி | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும | இப்படிகளுக்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த வழிகாட்டல் கோவையின் பிரகாரம் 01 ஆம் இலக்க அட்டவணை ஆலோசணையின் பிரகாரமே |

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய செயற்திட்டத்தின் மதிப்பீடுகளை தயாரித்தல், மேற்பார்வை மற்றும் கொடுப்பனவு பரிந்துரைத்தல் என்பவற்றிற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு செலுத்த வேண்டிய படிகள் தொடர்பாக 02 ஆம் இலக்க அட்டவணை பயன்படுத்தப்படாமல் 01 ஆவது அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு படிகள் உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ஒரே வகையில் கிடைக்கும் வகையில் கணக்கிடப்பட்டிருந்தது. | | பயன்படுத்தப்பட்டதுடன் அவ்வழிகாட்டிக் கோவையின் 02 ஆம் பிரிவின் 1 ஆவது பந்தி மூலம் சம்பளம், தரகுப்பணம், மேலதிக நேர வேலை, பிரயாணச் செலவினப் படிகள், கட்டணங்கள், ஓய்வூதியம் போன்ற அனைத்திற்குமாக இதனை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் விசாரித்து விளக்கங்கள் பெற்றுக்கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதுகாப்பு நிலைய திருத்த வேலைகளுக்காக நுவரெலியா மாவட்டத்தின் பிரதேச செயலக மட்டத்தில் முன்வைக்கப்பட்டிருந்த அபிவிருத்தி முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமிருந்து கிடைத்த ரூபா 1,692,000 ஆன நிதிஏற்பாடு 2019 மே 21 ஆந் திகதி நுவரெலியா மற்றும் ஹங்குரன்கெத பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. செயற்திட்ட நடவடிக்கை பௌதீக பரிசோதனையின் போது உத்தேச மதிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்காக திருத்திய மதிப்பீட்டின் கீழ் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. திருத்திய மதிப்பீட்டிற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் | நிதிஏற்பாட்டினை வழங்கிய அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமிருந்து திருத்திய மதிப்பீட்டிற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்படல் இடம் பெறுவதுடன் செயற் திட்டத்தை செயற்படுத்தும் போது தேவையான திருத்தங்களை மதிப்பீடு களுக்கு உள்ளடக்கி செயற்படுத்தப்படுவதுடன் அமைச்சின் புறம்பான அங்கீகாரமொன்று தேவையில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. |

கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சான்றுசெய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 138(4),(6) மற்றும் (8) இன் பிரகாரம் உறுதிச்சீட்டுக்களை சான்றுப்படுத்து வதற்கு அதிகாரமுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் சகல உறுதிச்சீட்டுக்களும் சான்றுப்படுத்த வேண்டிய போதிலும், நுவரெலியா மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகங்களில் ரூபா 6,006,137 தொகையான 19 உறுதிச்சீட்டுக் களுக்கு சான்றுறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து உறுதிச் சீட்டுக்களையும் சான்றுறுதிப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

கட்டுநிதி முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் கையிலுள்ள பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 620,029,700 தொகையான கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதும் ரூபா 190,863,000 தொகையான கட்டுநிதி மாத்திரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் கோரப்பட்ட கட்டுநிதி மற்றும் உள்ளவாறு கிடைத்த கட்டுநிதிக்கு இடையே வேறுபாடு 429,166,700 ஆக இருந்தது. இதன் காரணமாக ஆண்டின் இறுதியில் வேலைகள் பூர்த்தி | நிர்மாணப் பட்டியல் கொடுப்பனவுகளுக்காக ஆண்டின் இறுதி வரை தாமதிக்காமல் உடன்படிக்கை செய்யப்பட்டதன் பிரகாரம் நிர்மாண வேலையை பூர்த்தி செய்து முடிவடைந்த வுடன் தாமதமின்றி பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஒரு மாதத்திற்கு கோரப்பட்ட அளவு கிடைக்காமல் இருக்கும் அத்தொகையையும் சேர்த்து அடுத்த மாதத்திற்கு கோர நேர்வதால் ஆண்டின் இறுதியில் கட்டுநிதி கிடைக்காமையால் கையிலுள்ள பட்டியல் அதிகளவில் எஞ்சியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

செய்யப்பட்ட 452 செயற்திட்டங்களுக்காக ரூபா 402,613,246 தொகையான கையிலுள்ள பட்டியல் களுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 260-1-1-0-2509 செலவின விடயத்திற்குரியதாக ரூபா 4,050,000 ஆன மொத்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை தொடர்பாக நியாயமான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் சரியான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டும். | முன்னுரிமையல்லாத செயற்திட்டங்கள் மற்றும் இதுவரை ஆரம்பிக்கப்படாத பாதீட்டு முன்மொழிவுகளில் உள்ளடங்கும் செயற்திட்டங்களை எதிர்வரும் ஆண்டு வரை காலம் தாமதமாக்குதல் அல்லது நிறுத்தப்பட்டமைக்காக வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் இச்செயற்திட்டத்தை செயற்படுத்தவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கு குறிப்பு இலக்க iii இன் கீழ்வரும் கடப்பாடுகள் மற்றும் பொழிப்புக்கள் கூற்று திறைசேரியால் வழங்கப்படும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு அறிக்கையிடப்படாத | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் நிதி ஏற்பாடு சேமிக்கப் பட்டிருந்ததால் பொறுப்புக்களை உள்ளடக்கலாம். எனினும், நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையால் பொறுப்புக் கணக்கில் காண்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

எந்தவொரு பொறுப்பொன்றும் 2020 ஆம் ஆண்டின் போது தீர்வு செய்யப்படகூடாது. எனினும், நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,847,817 தொகையான பொறுப்புக்கள் திறைசேரியினால் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 செலவின அறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களால் 15 மூலதன செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படாமையால் அந்நிதி ஏற்பாடுகளிலிருந்து 15 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவில் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் நிதிஏற்பாடு இதற்காக ஒதுக்கீடு செய்ய முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.5 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வழங்கப்பட்டிருந்த செயல்நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்ததன் பின்னர் 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 06 சந்தர்ப்பங்களில் ரூபா 58,150 கூட்டுத்தொகையான கட்டுநிதி 38 நாட்கள் முதல் 71 நாட்கள் வரையான வீச்சிலான காலதாமதமொன்றுடன் தீர்வு செய்யப்பட்டிருந்தது. | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் திகதிய சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 (5) சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் சகல உத்தியோகத்தர்களும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்டாயமாக ஆலோசனை வழங்கியிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நுவரெலியா மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகங்களில் இருந்த மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 788,403 ஆக இருந்தது. அக்கடன் மீதிகள் 03 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதிவரை அம்மீதி அறவிடப்பட்டிருக்க வில்லை. | வழங்கப்பட்ட கடனை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடமாற்றம் பெறும் அனைத்து உத்தியோகத்தர்களின் கடன் ஒரே தடவையில் தீர்வு செய்யப்படாததுடன் மாதாந்தம் அறவிடும் தவணைகள் அனுப்பி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | நுவரெலியா பிரதேச செயலகத்திலிருந்து சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 05 ஆண்டு காலமாக காணப்படும் ரூபா 49,985 ஆன கடன்மீதியும் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான நிலுவையாக காணப்படும் ரூபா 459,818 ஆன கடன்மீதிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | வழங்கப்பட்ட கடனை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன்களை செலுத்தி முடிக்குமாறு அறிவித்து அனுப்பிய தொகையிலிருந்து ஒரு பகுதி தீர்வு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிறகு கொடுப்பனவு செய்யப்படவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 2.6 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 வைப்பு மீதிகளுக்குரிய ரூபா 5,358,120 கூட்டுத்தொகையான 28 மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி வைப்புக்கள் 10 ஆண்டுகள் மிகைத்திருந்த போதும் காணி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்கள் காணி கையேற்றும் |

| | | |
|---|---|---|
| | | செயற்பாடுகளில் காலம் கடந்தமையால் இந்நிலைமை உருவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**2.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 395(இ) பிரகாரம் ஒவ்வொரு முடிவடைந்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் நுவரெலியா பிரதேச செயலகம் வங்கி கணக்கிற்காக 2019 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான மாதங்களுக்குரிய 2020 மே 19 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதில் தாமதம் இடம் பெற்றிருந்ததாக ஏற்றுக் கொள்வதாகவும் தற்போது 2019 திசெம்பர் வரை வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுளளன. |
| (ஆ) நுவரெலியா மற்றும் வலபனே பிரதேச செயலகங்கள் 02 இன் வங்கி இணக்கக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 65,982 ஆன வழங்கப்பட்ட போதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காலாவதியான 11 காசோலைகள் தொடர் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 396(ஈ)பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 திசெம்பர் மாத வங்கி கூற்றில் ரூபா 29,437ஆன 06 மாதங்களை கடந்த காசோலைகள் உள்ளடக்கப்படாதிருந்த தாகவும் காலாவதியான காசோலைகள் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

#### 3.1.1 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பணிகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட மகளிர் அபிவிருத்தி பிரிவு மூலம் விதவை பெண்களின் அபிவிருத்தி தேவைகளை நிறைவேற்றுவதற்காக 25 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இயலுமை காணப்படுகின்ற நிறுவனங்களை இனங்காண்பதற்கும் செயற் திட்டத்தை சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் 250 விதவைப் பெண்களுக்காக பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் 50 பெண்களை சுயதொழில் வாய்ப்புக்கு தொடர்புபடுத்துவதற்கும் எதிர் பார்க்கப்பட்டிருந்த போதும் அச்செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் செயற் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் | சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் மேற் கொள்வதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதும் நிதி ஏற்பாடு இதற்காக ஒதுக்கீடு செய்யாமை அடிப்படையில் மேற்கொள்ள முடியவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | தோட்டத்துறை பெண்களின் போசணை நிலைமையை அதிகரிக்கும் நோக்கிலும் ஆரோக்கிய வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்திற்காகவும் 25 மலசல கூடங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. | எதிர்பார்த்த திட்டங்களின் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். | சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் மேற் கொள்வதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதும் நிதி ஏற்பாடு இதற்காக ஒதுக்கீடு செய்யப்படாததன் பேரில் மேற்கொள்ள முடியவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| | மகளிர் முயற்சிகளுக்காக மாவட்டத்தில் ஒரு பொது விற்பனை நிலையத்தில் விற்பனை தொகுதியொன்று நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த | எதிர்பார்த்த திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டுமட | தற்போது நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் மகளிருக்காக விற்பனை நிலையமொன்று நடாத்திச் செல்லப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | போதும் அது நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | | வருவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (இ) | கலாசார பிரிவினால் பிரதேச செயலக பிரிவினுள் 25 சுற்றுலா இடங்களை பாதுகாப்பதற்கும் 10 தொல்பொருள் இடங்களை பாதுகாப்பதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதும் ஆண்டில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்காக அமைச்சு மட்டத்தில் பணம் கிடைக்காமல் இருந்ததுடன் மத்திய கலாசார நிதியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளாக இருப்பதால் இவ்வாண்டில் மத்திய கலாச்சார நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டு இந்நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | முன்பள்ளி பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் முன்பள்ளி பாடசாலைகளில் 51 விளையாட்டு முற்றங்களை அமைத்தல், 21 பாடசாலைக்காக ஆரோக்கிய வசதிகளை வழங்குதல், 7 முன்பள்ளி பாடசாலைக்கு பாதுகாப்பு வேலிகள் நிர்மாணித்தல், 35 முன்பள்ளி பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குதல், 12 முன்பள்ளி பாடாசாலைக்கு மேசைகள் மற்றும் கதிரைகள் வழங்குதல் போன்ற திட்டமிடப்பட்ட நோக்கங்கள் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிப்பதற்கு உள்ள செயலாற்றல் அறிக்கையின் வரைவு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு சபைக்கு முன்வைப்பதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | போசணை அபிவிருத்தி தேவைப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கொத்மலை மற்றும் நுவரெலியா பிரதேச செயலக பிரிவுகளில் 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரை சிறுவர்களை போசணை குறைபாடு களிலிருந்து விடுவிப்பதற்காக செயற்படுத்து வதற்கு திட்டமிடப்பட்ட செயற் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிப்பதற்கு உள்ள செயலாற்றல் அறிக்கையின் வரைவு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு சபைக்கு முன்வைப்பதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 3.2 பிரதான செயற்பாடுகளுக்காக முரணான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கம்பெரலியா - துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2019 இன் கீழ் 2019 சனவரி 01 ஆந் திகதி MFMM/DFD/01/ 2019 ஆம் இலக்க தேசிய கொள்கைகள், பொருளாதார செயற்பாடுகள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலம் தற்காலிக கூரையொன்றை நிரந்தர கூரையொன்றாக மாற்றுவதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்ய முடியுமான போதும் கொத்மலே பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் நிறைவேற்ற வேண்டிய ரூபா 300,000 வீதமான செயற்திட்டமொன்றின் நோக்கங்களுக்கு முரணாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்களுக்குரிய செயற்திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கொத்மல பிரதேச செலயத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் பேரில் கொத்மல பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் பூண்டுலுஓயா நகரின் வாரச் சந்தையை அமைக்கும் செயற்திட்டம் செயற் படுத்தப்பட்டு அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அச் செயற்திட்டத்தை பரீட்சித்த போது பூண்டுலுஓயா பேருந்து நிறுத்துமிட நிலையத்தை நிர்மணிப்பதற்காக பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தை பயன்படுத்தி | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | பூண்டுலுஓயா நகரின் வாரச் சந்தையை அமைத்தல் கொத்மலை பிரதேச சபையினால் செயற்படுத்தப் பட்ட செயற்திட்டமொன்றாகும். கணக்காய்வினால் கட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கொத்மலை பிரதேச சபைக்கு கணக்காய்வு விசாரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தாமதமின்றி பதிலை வழங்குமாறு |

| | | | |
|---|---|---|---|
| | வாரச்சந்தை நிர்மாணிக்கப் பட்டிருந்தது. கட்டிடத்தின் கூரையை அமைக்கும் போது சரிவாக இடப்படும் இரண்டு சீ பேலினிக்கு இடையே ஆகக்கூடிய இடைவெளி 1.5 m ஆக இருக்க வேண்டிய போதிலும் 2.15m இடைவெளியுடன் சீ பேர்லின் பயன்படுத்தப்பட்டு கூரை பொறியியலாளர் தரத்திலிருந்து இல்லாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கொங்கிரீட் தூண்கள் மீது சீ பேர்லின்கள் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் தூண்கள் மீது சீ பேர்லின்களை வைப்பதற்கு சிக்கலான இடங்களில் ஒரு கம்பி யொன்றினால் சீ பேர்லினுடன் ஒட்டப்பட்டு கூரை அமைக்கப்பட்ட இடங்கள் காணப்பட்டன. | | அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | கொத்மலை பிரதேச செயலகத்தினால் கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்தின் நுவரெலியா மாவட்ட காரியாலயத்தின் மேற்பார்வையின் கீழ் ரண்வன்தலாவ இக்காவ கால்வாயை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த வாய்க்காலின் அகலம் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் 220 mm இருந்த போதும் அது 200 mm முதல் 220 mm வரையான வீச்சில் காணப்பட்டது. கால்வாய் மார்க்கம் அடைந்துள்ள கருங்கல் சுற்றுப்புறமாக கால்வாயின் சுவர் நிர்ணயிக்கப்பட்டிருந்த இடம் காணப்பட்டதுடன் அது முறையாக நிலத்துடன் தொடர்புபடுத்தப் பட்டிருக்கவில்லை. திட்டத்தின் பிரகாரம் ஓரச் சுவரின் நிலத்தின் மேற்பகுதி 600 mm ஆகவும் நிலத்திற்குள் (Foundation) பகுதி 300 mm ஆகவும் இருக்க வேண்டிய போதிலும் நிலத்தின் மேற்பகுதி | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | ரன்வன்சாவ இக்காவ வாய்க்கால் அபிவிருத்தி செய்யும் நுவரெலியா கமநல அபிவிருத்தி மாவட்ட காரியாலத்தினால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்றென கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக கமநல அபிவிருத்தி மாவட்ட செயலகத்திற்கு கணக்காய்வு விசாரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தாமதமின்றி பதிலை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் உரிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | (Super structure) பகுதி 900 mm ஆன இடங்கள் காணப்பட்டன. இச் சுவருக்கு முன்னர் காணப்பட்ட ஒரச்சுவரின் உட்புறத்தை அகற்றாமல் அதன் மீது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட சுவரின் பல இடங்களில் தேன் வதை போல காணப்பட்டது. | | |
| (இ) | கொத்மலை பிரதேச செயலகம் செயற்படுத்தப்பட்ட வெவஹின்ன பிரதான வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் தொடர்பாக 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வீதியின் மூன்று இடங்கள் வெடிப்பு ஏற்பட்டிருந்தது. வீதியை மீண்டும் திருத்தி தருமாறு 2020 சனவரி 08 ஆந் திகதி கொத்மலே பிரதேச செயலகத்தினால் உரிய ஒப்பந்தக்காரருக்கு எழுத்துமூலம் அறிவூட்டப்பட்டிருந்த போது கணக்காய்வு திகதியான 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி வரையிலும் அதனை மீண்டும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் பராமரிப்பு காலப்பகுதியில் வீதியில் கோடுகள் விழுந்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தரால் அறிக்கையிடப்பட்டதன் பின்னர் தொடர்புடைய உத்தியோகத்தர்களின் ஆலோசனையின் பேரில் அதனை தயார்படுத்து வதற்காக குறித்த ஒப்பந்தக்காரருக்கு 2020 சனவரி 08 ஆந் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் மீண்டும் அமைக்கப்பட்ட பகுதியின் இருப்பினை உறுதிப்படுத்தியதன் பின்னர் பிடிகாசு விடுவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | கொத்மலே பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பேரில் கமநல சேவைகள் நுவரெலியா மாவட்ட அலுவலகத்தினால் மேற்பார்வை செய்யப்பட்ட ஹெல்பொடவெவ ஹின்ன வாய்க்காலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2002 பெப்ரவரி 20 ஆந் திகதி அச்செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசேதனையின் போது கால்வாயின் உள்ளே ஆரம்பம் முதல் 40 mm வரையான பகுதி அமைக்கப்படா மையால் கால்வாய்க்கு கீழாக அமைந்துள்ள வீடுகளுக்கு நீர் | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | நுவரெலியா கமநல சேவைகள் அபிவிருத்தி மாவட்ட காரியாலயத்தினால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்ட மொன்றாக கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக கமநல அபிவிருத்தி மாவட்ட செயலகத்திற்கு கணக்காய்வு விசாரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் தாமதமின்றி பதிலை வழங்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் அந்நிறுவனத் திடமிருந்து பதிலை கிடைத்தவுடன் பதில் அனுப்பி வைப்பதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | கசிந்து காணப்பட்டது. | | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. |
| (உ) | வலபனே பிரதேச செயலகம் ரூபா 1,000,000 ஆன நிதி ஏற்பாட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சேருபிட்டிய இஹல வீதியை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 07 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது வீதியின் இருபக்க (Shoulder) அமைக்கப்படாமல் இருந்ததுடன் தடுப்புச் சுவர் இடப்பட வேண்டிய அவசியமான இடமொன்று காணப்பட்ட போதும் அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் வீதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வினை சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் அபிவிருத்தி திட்டங்களில் இவ்வாறான சுவரொன்றை நிர்மாணிப்பதற்கு உரிய முன்மொழிவொன்று சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | நுவரெலியா பிரதேச செயலகத்தினால் மேற்பார்வை செய்யப்பட்ட பீதுரு தோட்ட வீதி அபிவிருத்தி மற்றும் ஓரச்சுவர் நிர்மாண வேலை செயற்படுத்தப்பட்டிருந்தது. 2020 மார்ச் 03 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 1,278,435 செலவிடப்பட்டு வீதிக்காக பக்கச்சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த பக்கச்சுவர் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் சுவரின் விப்ஹோல் வைக்கும் போது சில பள்ளத்திற்கு புறம்பாக வைக்கப்பட்டிருந்தமை. | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செயற் திட்டங்களின் நிர்மாணங்கள் 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் என மூன்று பேரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்கு நேர்ந்ததுடன் அவ்வாறான தவறொன்று இடம்பெறாமல் இருக்குமாறு உரிய உத்தியோகத்தர்கள் தெரியப் படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் மேற்பார்வை செய்யப்பட்ட ரூபா 3,000,000 ஆன நிதி ஏற்பாட்டின் பேரில் கர்கஸ்வேல்ட் கீழ் பகுதியின் பாலத்தின் நிர்மாணச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. அப் பாலம் தொடர்பாக 2020 மார்ச் 26 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது இரண்டு பக்க விப்ஹோலிற்காக இடப்பட்டிருந்த கொங்கிரிட் தரத்தில் | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வினை சுட்டிக் காட்டப்பட்டுள்ள தரமற்ற கொங்கிறீட் இடப்பட்ட இடங்கள் தொடர்பாக ஹமர் பரிசோதனையொன்று மேற்கொண்டு அறிக்கை வழங்குமாறு மாவட்ட பொறியியலாளருக்கு தெரியப்பட்டிருந்தார். அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாமல் இருந்ததுடன் தேன் வதை போல குறைபாடு காணப்பட்டது. | | குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (எ) | அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் மேற்பார்வை செய்யப்பட்ட ரூபா 2,000,000 ஆன நிதி ஏற்பாட்டின் பேரில் ஹட்டன் எபொஸ்டிலிவத்த விளையாட்டரங்கு நிர்மாண செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருந்தது. அளவீட்டு பத்திரத்தின் ஒரு உருப்படியான தடுப்புச் சுவர் நிர்மாணத்திற்காக ரூபா 559,480 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சுவரின் நிலைத்திரு தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அத்தியவசியமான தடுப்புச் சுவரின் நீர் வழிந்தோடும் குழாயை வைப்பதற்காக ரூபா 7,003 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் நீர் வழிந்தோடும் குழாய்க்கு அருகே கட்டுக்கல் வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விளையாட்டரங்கின் நிலப்பகுதிக்கு ரூபா 76,456 செலவிடப்பட்டிருந்த போதும் அதில் வெடிப்பேற்பட்டிருந்தது. நிலத்திற்காக சாந்துபூசுதல் (Rendering) 1 ½ அளவிலான இடங்கள் காணப்பட்டன. ஓரக்காணுக்காக ரூபா 81,980 செலவிடப்பட்டிருந்ததுடன் 2020 மே 31 ஆந் திகதி அளவில் அதில் வெடிப்பேற்பட்டிருந்ததுடன் பலவீனமான கொங்கிரீட் கலவை யொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற் திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | இந்த நிர்மாணங்களுக்காக பிடிகாசு கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் இக் குறைபாடுகளை சரிசெய்யும் பொருட்டு குறித்துக் கொள்ளப்பட்ட தாகவும் கொங்கிரீட் தரமில்லையென கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட இடங்கள் தொடர்பாக ஹமர் பரிசோதனையொன்று மேற்கொண்டு அறிக்கை வழங்குமாறு மாவட்ட பொறியியலாளருக்கு தெரியப் பட்டுள்ளதாகவும் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக குறிப்பிடப் பட்டிருந்தது. |

## 3.4 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை (Out come) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கொள்கைகள், பொருளாதார செயற்பாடுகள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சினால் சமய இடங்களுக்காக சூரிய சக்தி வசதிகளை வழங்குவதற்காக நுவரெலிய மாவட்டத்திற்கு ரூபா 42,500,000 ஆன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து 55 சூரிய சக்தி முறைமைகளை நிறுவுவதற்கு தனியார் கம்பனியொன்றுடன் 2019 ஆகஸ்ட் மாதம் ரூபா 23,479,500 இற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தக்காரர் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சூரிய சக்தி முறைமையை நிறுவி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் பரீட்சிக்கப்பட்ட 05 செயற் திட்டங்கள் கணக்காய்வு திகதியான 2020 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. வேலை பூர்த்தி செய்யப்பட்டும் எந்தவொரு செயற்திட்டமம் செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை. செயற் திட்டங்களில் சூரிய பெனல் சரிவாக நிறுவப்படாமை, விதந்துரைகளுக்கு புறம்பாக பிரேகர் இடப்பட்ட 05 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | மதிப்பீடு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் செயற் திட்டத்தை செயற்படுத்தப்பட வேண்டும். | இச் செயற்திட்டத்திற்காக பணக் கொடுப்பனவு முழுமையாக இக் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிக்கள பரிசோதனையின் போது இனங்காணப்பட்டதுடன் அக் குறைபாடுகள் சரி செய்யப்பட்டதன் பின்னர், பணக்கொடுப்பனவினை மேற் கொள்வதற்கு உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் மின்சார சபையுடன் உடன்படிக்கையை குறித்த சமய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டமையால் அதற்குரிய செயற்பாடுகளை தற்போது மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வலபனே பிரதேச செயலகத்தினால் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அல்மாவத்த சீடன் பகுதி விளையாட்டரங்கு நிர்மாணத்திற்காக ரூபா 2,000,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 18 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது மைதானத்தை வெட்டும் போது பாரியளவில் கருங்கற்கள் தோன்றியிருந்ததுடன் அவற்றை திடலில் இருந்து போதியளவில் அகற்றப்படாமையால் மைதானத்தை பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது. மைதானத்தை மட்டுப்படுத்தும் செயற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் குறித்துரைக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் உடன்படிக்கை காலப்பகுதியில் செயற்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். | கிடைத்த பணத்தின் அளவின் பிரகாரம் விளையாட்டரங்கு நிர்மாணத்தின் அத்தியாவசிய பகுதிகள் மாத்திரம் ஆரம்பத்தில் மேற்கொள்ளப் பட்டு குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மிகை கொடுப்பனவு தொடர்பாக மாவட்ட செயலகத்தின் மாவட்ட பொறியியலாளரினால் நிலையப் பரிசேதனை மேற்கொள்ளப்பட்டதுடன் மிகை கொடுப்பனவு கணக்கிடப்பட்டு 2020 மே 22 ஆந் திகதி ரூபா 193,400 அறவிடப்பட்டு அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதால் கற்களை உடைத்து அகற்றுவதற்காக குறித்த ஒப்பந்த சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சங்கம் அச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் மேலும் அறவிட வேண்டிய மிகை கொடுப்பனவிலிருந்து அச் செயற்பாட்டை நிறைவேற்று வதற்கு எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ரொப்ஹில்வத்த வீதிக்கு காபட் இடும் செயற்திட்டத்திற்காக ரூபா 7,026,169 பெறுமதியில் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்தின் ரூபா 6,414,560 ஆன வேலைப்பகுதி நிறைவேற்றப்பட்டிருந்தது. இங்கு வீதியின் இரண்டு பக்கங்களிலும் வடிகாண் இடும் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அத்தியவசிய உருப்படியொன்று நிறைவேற்றப்படாமையால் வீதியின் இரு ஓரங்களும் (edge) 2020 மார்ச் 10 ஆந் திகதி அளவில் உடைந்திருந்த இடங்கள் காணப்பட்ட போதும் முறையாக பதப்படுத்தப்படாத | மதிப்பீடு மற்றும் குறித்துரைக்கப்பட்ட விதந்துரைகளின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் உடன்படிக்கை காலப்பகுதியில் செயற்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். | முறையாக பதப்படுத்தப்படாத இடங்களை பூரணப்படுத்தப் படாத வீதியின் இரண்டு பக்கங்களிலும் உள்ள வீதி குறியீடுகளில் உள்ள குறைபாடுகளை சரிசெய்யுமாறு ஒப்பந்தக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்த காலப்பகுதிகளில் இமல்ஷன் அஸ்பொலட் ஊற்றுதல் போன்ற சந்தர்ப்பங்களில் பொருத்தப்பட்டிருந்த சமிஞ்சை பதாதை, கொடிக் கம்பங்கள் இடல், தடை பட்டி இடுதல் போன்ற சமிஞ்சைகளுக்காக ரூபா 25,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | இடங்கள் காணப்பட்டன. வீதியின் சில இடங்களில் வீதியினுள் நீர் கசிந்து செல்லக்கூடிய இடங்கள் காணப்பட்டமையால் வீதியினுள் நீர் கசியக்கூடிய ஆபத்தொன்று காணப்பட்டது. வீதியின் இரண்டு பக்கங்களுக்கும் இடப்பட்டிருந்த வெள்ளைக் கோடுகள் (Road edge marking) அனைத்தும் தற்போது வெடிப்பு ஏற்பட்டிருந்ததுடன் தேவையான சமிஞ்சை பதாதைகள் (Road signs, Markings, Lights) எதுவும் இடப்படாதிருந்த போதும் அதற்காக ரூபா 250,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அம்பகமுவ சமூர்தி வங்கிக்கு அருகிலிருந்து ஆரம்பமாகும் பாடசாலை கிராம மாவத்தை வீதிக்கு தார் ஊற்றும் செயற்பாடு நிறைவு பெற்றிருந்தது. 2020 மார்ச் 10 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது வீதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் வடிகாண் கூடுதலான இடங்களில் வீதியினை விட 6'' அங்குலத்திற்கு மேலாக அமைத்து வீதியின் நீர், வடிகாண் ஊடாக செல்ல முடியாமல் காணப்பட்ட போதும் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல்களின் பெறுமதி ரூபா 1,106,873 ஆக இருந்தது | மழை நீர் வழிந்தோடும் வகையில் வடிகாண் நிர்மாணிக்கப்பட வேண்டும். | வீதியில் மேற்பரப்பிற்கு மேலாக காணப்படும் கொங்கிரீட் வடிகாணை நீர் வழிந்தோடக் கூடிய வகையில் அமைக்குமாறு ஒப்பந்தச் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் அறிக்கையிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.5 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்டிருந்தமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியா பிரதேசத்தில் பெபினோ பயிர் செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக சனாதிபதி செயலகத்திலிருந்து 2019 மே 02 ஆந் திகதி ரூபா 1,116,938 ஆன நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | கிடைக்கும் நிதி ஏற்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு உயர்ந்த சேவையொன்றை வழங்கும் வகையில் | 2019 ஏப்ரல் 21 ஆந் திகதி ஏற்பட்ட நிலைமையின் பேரில் சுற்றுலா பிரயாணிகளின் வருகை குறைவடைந்த மையால் பெபினோவிற்காக சுற்றுலா ஹோட்டல்களில் |

| | | | |
|---|---|---|---|
| | இதற்காக செயற்திட்ட அறிக்கையை தயாரிக்கும் போது 11 நலனாளிகள் இனங்காணப்பட்டிருந்தனர். எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அவர்களின் அக்கரை குறைவடைந்ததாக காரணமாக குறிப்பிட்டு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கேள்வி குறைவடைந்த மையால் விலை வீழ்ச்சியடைந்தமை இச்செயற் திட்டத்தை செயற்படுத்தாமல் இருப்பதற்கு பிரதான காரணமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மிளகாய் பயிர்ச்செய்கை செயற் திட்டமொன்றுக்காக ரூபா 2,927,775 ஆன நிதிஏற்பாட்டை சனாதிபதி செயலகத்தினால் 2019 செப்தெம்பர் 25 ஆந் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் நலனாளிகளை தெரிவு செய்தல் 2019 சனவரி மாதத்தின் போது மேற்கொள்ள வேண்டியிருந்தது. 10 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2019 ஒக்தோபர் 28 ஆந் திகதி நலனாளிகள் இனங் காணப்பட்டிருந்தனர்.<br>இந்நலனாளிகளிடமிருந்து 50 சதவீத பங்களிப்பினை பெற்று செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>பொலிடனலை நிர்மாணிப்பதற்காக பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளாமை காரணமாக இந்நிதிஏற்பாடு திருப்பி அனுப்பி வைத்து செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | கிடைக்கும் நிதி ஏற்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு உயர்ந்த சேவை யொன்றை வழங்கும் வகையில் செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்திட்ட அறிக்கைக்கு அங்கீகாரம் கிடைக்கும் போது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு சந்தை விலைகளை விஞ்சியிருந்தமையால் மற்றுமொரு மதிப்பீடு அதே திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கான அங்கீகாரம் 2019 ஒக்தோபர் 11 ஆந் திகதி கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் சனாதிபதி தேர்தல் அக்காலப்பகுதியில் நடாத்தப்பட்ட காரணத்தினால் அதனை செயற்படுத்த முடியாமல் போனதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | கலப்பு மிளகாய் விதை உற்பத்தி செய்யவும் செயற்திட்டமொன்றுக்காக ரூபா 3,080,000 ஆன செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் அண்ணளவாக 235 நலனாளிகள் சேவையில் ஈடுபடுத்த முடியுனெ இனங்காணப்பட்டிருந்தது. செயற்திட்ட காலப்பகுதியின் பிரகாரம் யூலை, ஆகஸ்ட், செப்தெம்பர் ஆகிய மாதங்களில் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் நிறுவுவதற்கும் செயற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. 2019 ஆகஸ்ட் மாதம் அளவில் நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் இயந்திரங்கள் / குளிர் களஞ்சியம் என்பவற்றை கொள்வனவு | கிடைக்கும் நிதி ஏற்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு உயர்ந்த சேவையொன்றை வழங்கும் வகையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 07 செயற்திட்டங்களுக்கு பயிற்சிக்காக அதிகளவில் செலவுகள் ஏற்படுவதால் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் இனங்காணப்பட்ட நலனாளிகளின் ஒரு பகுதியினரை பயிற்சி யளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் செயற்திட்டம் அங்கீகரிக்கப்படும் வரை நலனாளிகளின் பங்களிப்பு 50 சதவீதம் பெற்றுக் கொள்ளப்பட்டு செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நலனாளிகளின் இணக்கப்பாட்டை பெற்றுக் |

| | | |
|---|---|---|
| செய்வதற்காக பெறுகை செயற்பாடுகள் தாமதமானமையால் குறித்த பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நிறுவனங்கள் முறையான இனங்காணப்படாமையால் இந்நிதிஏற்பாடு திருப்பி அனுப்பப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | | கொள்ள இயலுமை இல்லாதிருந்ததாலும் இயந்திரங்கள் மற்றும் குளிர் களஞ்சியம் தொடர்பான பரிந்துரைகளை தயாரிப்பதற்கு காலம் எடுத்தமையாலே கூறுவிலை கோருவதற்கு அறிவிப்பதற்கு அதிக காலம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.6 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நுவரெலியா மாவட்ட செயலகம் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொங்கிறீட் இடும் செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஒக்தோபர் 08 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் 18 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. இந்த ஒப்பந்தம் ரூபா 19,931,926 இற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2020 மார்ச் 06 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 14,089,212 ஆன அதாவது மதிப்பிடப்பட்ட பெறுமதியில் மேற்கொண்ட 70 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு மற்றும் உரிய விதந்துரைகளின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையில் உடன்படிக்கை காலத்தில் செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இச்செயற்திட்டத்திற்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பகுதிக்காக மாத்திரம் ஒப்பந்தக்காரரால் பட்டியலை சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் 70 சதவீதத்திற்காக கொடுப்பனவு செய்ய நேர்ந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட கர்கஸ்வேல்ட் கீழ் பகுதி பாலம் நிர்மாண செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் 2019 மார்ச் 25 ஆரம்பிக்கப்பட்டு 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2019 நவம்பர் 30 ஆந் திகதி நிர்மாணத்தின் | மதிப்பீடு மற்றும் உரிய விதந்துரைகளின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையில் உடன்படிக்கை காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாலம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்திலிருந்து வெட்டி அகற்றிய மண்ணில் இரத்தின படிவு இருக்கலாம் என தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதனை சட்டரீதியான அகற்றும் நடைமுறை யொன்றில் விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதாக பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. கையிலுள்ள பட்டியலாக ரூபா 1,940,000 ஆன பட்டியல்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2020 மார்ச் 06 ஆந் திகதி வரை நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக பட்டியல் தயாரிப்பதிலிருந்து தவிர்த்தல் வேண்டும் | தயாரிக்க முடியாமை காரணமாக உடன் படிக்கையின் பிரகாரம் பாலத்தின் வேலைகளை ஆரம்பிக்க முடியாமல் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட பஹதுலுவ மீன்பிடிநிலையத்திற்கு அண்மையில் இருந்து தெகிந்த வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. வீதியின் நீளம் 136 மீற்றரும் அகலம் 3.1 மீற்றருமாக வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக 2019 நவம்பர் 30 ஆந் திகதி ரூபா 736,135 ஆன இறுதிப்பட்டியல் தயாரிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2020 மார்ச் 10 ஆந் திகதி வரை வீதியின் நீளத்தில் 79.5 மீற்றர் அளவில் தாரிட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு மற்றும் உரிய விதந்துரைகளின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையில் உடன்படிக்கை காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக பட்டியல் தயாரிப்பதிலிருந்து தவிர்த்தல் வேண்டும் | ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை காரணமாக நிர்மாணங்களின் வேலை பூர்த்தி செய்தல் ஊடாக நாம் நிதிச் சிக்கல்களுக்கு உள்ளாக கூடும் என ஒப்பந்த சங்கம் அச்சம் கொண்ட காரணத்தால் வேலைகள் தாமதமடைந்த தாகவும் அதன் காரணமாக சில நிர்மாணங்களின் மதிப்பீட்டின் பிரகாரம் 100 சதவீதம் வேலையை நிறைவேற்ற முடியாமல் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட அம்பகமுவ சமூர்தி வங்கிக்கு அருகிலிருந்து ஆரம்பமாகும் பாடசாலை கிராம மாவத்தை வீதிக்கு தார் ஊற்றி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் இரண்டாவது தார் ஊற்றுதல் கணக்காய்வு திகதியான 2020 மார்ச் 10 ஆந் திகதி வரை செயற்படுத்தியிருக்க வில்லை. எனினும், வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக முறையே ரூபா 1,749,257 தொகையும் ரூபா 1,738,860 ஆன பட்டியல்கள் 2019 நவம்பர் 30 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தன. | மதிப்பீடு மற்றும் உரிய விதந்துரைகளின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையில் உடன்படிக்கை காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக பட்டியல் தயாரிப்பதிலிருந்து தவிர்த்தல் வேண்டும் | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் 2020 மார்ச் 10 ஆந் திகதி வரை 2 ஆவது முறை தார் ஊற்றப்படவில்லை என்பதாக ஏற்றுக்கொள்வதுடன் தற்போது வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்மாணத்தின் இறுதிக்கொடுப்பனவு ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்படவில்லெயென அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.7 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன் முன்னேற்றம் பெற்றிராத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வலப்பனே பிரதேச செயலக அதிகார பிரதேசத்தின் திப்பட்டுகொட விஹாரையின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகள் பூர்த்தி செய்வதற்காகவும் தாதுமந்திரை நிர்மாணிப்பதற்காகவும் புத்த சாசன அமைச்சினால் ரூபா 2,000,000 ஆன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தது. CL/NE/A/ WAL/2019/6 ஆம் இலக்க 2019 மார்ச் 11 ஆந் திகதி எனது கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் இவ்விஹாரைக்காக 04 ஆண்டுகளில் அரசினால் ரூபா 6,873,981 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | மதிப்பீடு மற்றும் உரிய விதந்துரைகளின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையில் உடன்படிக்கை காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெவ்வேறு அமைச்சுக்கள் திணைக்களங்கள் மூலம் கிடைக்கும் அபிவிருத்தி திட்டங்களின் பிரகாரம் மற்றும் பங்களிப்பு சபையின் வேண்டுகோளின் பேரில் குறித்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவ்வருடத்தில் கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் தாது மந்திரை நிர்மாணிப்பதற்கும் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்கு என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (i) மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 90,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட குளியறைக்காக பொருத்தப்பட்டிருந்த பேசன் மற்றும் கொமட் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தில் இல்லாமல் இருந்ததுடன் அதற்காக உத்தரவாதக் காலமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | தரமில்லாத குளியலறை உபகரணங்கள் பொருத்தப்பட்டவை தொடர்பாகவும் அவற்றை அகற்றுமாறும் குறித்த ஒப்பந்தக்காரர் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அச்செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் வரை கொடுப்பனவு செய்றபாடுகள் தாமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) வீதியின் இரண்டு பக்கங்களையும் சேர்க்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாலத்திற்கு மேலாக மேவுகை கூரையொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 109,500 மதிப்பீடு | | கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் கூரையில் காணப்பட்ட குறைபாடுகள் தற்போது சரி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. அக்கூரைக்கு ரெஜின் இடுவதற்கு பதிலாக கூரைத்தகடு இடப்பட்டு உச்சி பகுதி தரமில்லாமல் அமைக்கப்பட்டிருந்தது. | |
| (iii) | கதவுகளுக்காக ரூபா 243,352 மதிப்பீடு செய்யப் பட்டிருந்ததுடன் கதவு பூட்டிற்காக ரூபா 60,350 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், பொருத்தப்பட்டிருந்த கதவுகளுக்காக குஞ்சம் இடப்பட்டிருக்கவில்லை. மேலும், முதிர்வடையாத பலகை இடப்பட்டு குறைபாடுகளுடன் கூடிய பகுதிக்கு பலகைத் துண்டு இட்டு கதவு தரமில்லாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. | தரமில்லாத கதவுகள் கழற்றி அகற்றப்பட்டு மீண்டும் தரமான கதவுகளும் பூட்டுக்களையும் பொருத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், கொடுப்பனவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (ஆ) | அதிக மண்சரிவு ஆபத்துள்ள இடங்களில் வாழும் நபர்களை மீள்குடியேற்றுவதற்கு வெதமுல்ல லீலிஸ்லேண்ட் தோட்டத்தில் 105 வீடுகளை நிர்மாணிப்பதற்காக முதலாவது தவணையாக ரூபா 21,000,000 ஆன நிதியேற்பாடு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 2018 யூலை 23 ஆந் திகதி கொத்மலை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் குறித்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையால் நிதிஏற்பாடு மீள அனுப்பி வைக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது மேற்படி செயற்திட்டத்தின் கீழ் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பின் மேற்பார்வையின் கீழ் 40 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 8,000,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. அவ்வீடுகளுக்கு அத்திவாரம் இடுவதற்காக முறையே 2019 மே 05 ஆந் திகதி மற்றும் 2019 நவம்பர் 26 ஆந் திகதிகளில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 23 ஆந் திகதி மேற்கொண்ட நிலையப் | வீடுகளை நிர்மாணிப்ப தற்காக 3 ஆண்டுகளுக்கு முன்னர் தோட்ட நிர்வாகத்திலிருந்து திறைசேரியிடமிருந்து இக்காணி விடுவிக்கப்பட்டதுடன் நலனாளிகளால் வீடுகளை நிர்மாணிப்பது சிரமமாக இருப்பதால் இச்செயற்பாட்டை இதுவரை மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளுக்காக காணியின் உரித்தை வழங்கும் வகையில் இந்நபர்களுக்காக காணியின் உரித்தை வழங்க முடியுமாக இருப்பதுடன் அதற்காக அந்த அமைச்சின் கீழ் இவ்வீடுகளின் நிர்மாணம் மேற்கொள்ளப்பட வேண்டும். மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் இணை நிறுவனமொன்றான பெருந்தோட்ட மனிதவள |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனையின் போது 27 வீடுகளுக்கு மாத்திரம் அத்திவாரம் இடல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 மே 05 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 20 வீடுகளுக்கு அத்திவாரம் இடும் செயற்பாடுகள் 2019 மே 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிலிருந்து ரூபா 11,600,000 கிடைத்திருந்ததுடன் அது பெருந்தோட்ட மனித வளங்கள் அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி கொத்மலே பிரதேச செயலகத்திற்கு மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | | அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பினூடாக வீடுகளை நிர்மாணிப்பதற்கு 2019 திசெம்பர் 27 ஆந் திகதி அதற்காக தேசிய அனர்த்த உதவிச் சேவைகள் நிலையத்தின் நிபந்தனை களுக்கு உட்பட்டு அங்கீகாரம் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மண்சரிவு அதிக ஆபத்துள்ள இடங்களில் வாழும் நபர்களை மீள் குடியேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டின் மதிப்பீட்டிற்கு 2019 ஆம் ஆண்டின் போது நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதனால் நுவரெலியா மாவட்டத்தில் மீள் குடியேற்றப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை 1087 ஆக இருந்த போதும், 177 குடும்பங்களுக்காக மாத்திரம் வீடுகள் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | மதிப்பீடு மற்றும் உரிய விதந்துரைகளின் பிரகாரம் நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையில் உடன்படிக்கை காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நுவரெலியா மாவட்டத்திற்காக அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டில் 25 செயற்திட்டங்களுக்காக ரூபா 56,825,000 தொகையும் 2019 ஆம் ஆண்டில் 39 செயற் திட்டங்களுக்காக ரூபா 81,347,300 தொகையும் கோரப்பட்டிருந்தன. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிதிஏற்பாடு குறைந்த அளவிலேயே கிடைத்தது. 2019 ஆம் ஆண்டில் ஒரு செயற்திட்டத்திற்காக மாத்திரம் ரூபா 1,994,258 ஆன நிதிஏற்பாடு கிடைத்திருந்தது. முன்மொழிவு தொடர்பாக விரிவான அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்ட சில செயற்திட்டங்களுக்காக 2017 ஆம் முதல் 2019 ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிலும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டில் நிதிஏற்பாடு கோரப்பட்ட 39 | அனர்த்தங்களை குறைப்பதற்காக இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களுக்கு இடையே 12 செயற்திட்டங்கள் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அனர்த்த பிரதேசமாக பெயரிடப் பட்டிருந்த இடங்களில் மேற்கொள்ள வேண்டிய செயற் திட்டங்களாக இருந்தன. அனர்த்தங்களை குறைப்பதற்காக இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்தாமையால் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெவ்வேறு நிலைகளில் குடியிருக்கும் மக்களை அவ்விடங்களிலிருந்து அகற்றுவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | | |
| (உ) | மீளாய்வாண்டின் போது நுவரெலியா மாவட்டத்தில் மீள்குடியேற்ற செயற்பாடுகளுக்காக ரூபா 49,200,000 ஆன நிதியேற்பாடு பிரதேச செயலகங்களுக்கு வழங்கப் பட்டிருந்தது. அதில் ரூபா 27,988,000 நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்த துடன் ரூபா 21,012,000 அதாவது 43 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அனர்த்தங்களை குறைப்பதற்காக இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | மாவட்ட விவசாய பிரிவின் மூலம் மீளாய்வாண்டின் நுவரெலியா மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்காக 07 செயற்திட்ட முன்மொழிவுகள் சனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. செயற் திட்டத்தின் 04 முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்காக சனாதிபதி செயலகத்தினால் ரூபா 21,950,910 ஆன நிதிஏற்பாடு கிடைத்திருந்தது. அதில் ஒரு செயற்திட்டத்தை மாத்திரம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்காமை காரணமாக 2019 நவம்பர் 20 ஆந் திகதிய BD/GPS/155/09/01/ HA-2019 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் ரூபா 7,124,713 ஆன ஏற்பாடு சேமிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது | வழங்கப்படும் நிதி ஏற்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு உயர்ந்த சேவை யொன்றை வழங்கும் வகையில் செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஏப்ரல் 21 ஆந் திகதி இடம்பெற்ற நிலைமையின் பேரில் சுற்றுலா பிரயாணிகளின் வருகை குறைவடைந்தமையால் பெபினோவிற்காக சுற்றுலா ஹோட்டல்களில் கேள்வி குறைவடைந்தமை, செயற்திட்ட அறிக்கைக்காக அங்கீகாரம் கிடைப்பதில் தாமதம், இயந்திரங்கள், குளிர்சாதன களஞ்சியம் தொடர்பாக விபரங்களை தயாரிப்பதில் காலம் எடுத்தமை காரணங்களால் செயற்திட்ட செயற்பாடு களை ஆரம்பிக்க முடியாமல் இருந்தாக அவதானிக்கப்பட்டது. |

**3.8 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகத்தினால் அடையப்பெற்ற விசேட இலக்குகளை கிராமசக்தி மக்கள் வியாபாரத்திலிருந்து பெற்றுக்கொண்ட கிராம சக்தி மற்றும் பௌதீக செயலாற்றல் மற்றும் வெவ்வேறு புதிய வருமான மார்க்கங்களை இனங்காண்பது குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், கிராமசக்தி வியாபாரத்திலிருந்து முன்னைய ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 15 செயற்திட்டங்களில் 06 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி அளவில் கைவிடப் பட்டிருந்ததுடன் செயற்பாட்டு மட்டத்தில் காணப்பட்ட நிர்மாணங் களுக்குரிய இலக்குகள் மற்றும் பௌதீக நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளவாறு இருந்தன. | திட்டடமிடப்பட்ட செயற் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளை உயர்ந்த மக்கள் சேவை யொன்றை வழங்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (i) கோவர புல் வளர்ப்பாளர்களின் வருடாந்த வருமானத்தை அதிகரிக்கும் செயற்திட்டத்தின் கீழ் புல் வளர்க்கும் நடவடிக்கை 2018 பெப்ரவரி மாதத்தின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2018 யூன் மாதம் வரை தாமதிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் புல் போக்குவரத்திற்காக லொறி வண்டியொன்று, புல் வெட்டும் இயந்திரமொன்று என்பவற்றை கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் மாதம் வரை அவை கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. 50 ஏக்கர் காணியில் புல் வளர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், | வழங்கப்படும் நிதி ஏற்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு உயர்ந்த சேவை யொன்றை வழங்கும் வகையில் செயற் திட்டத்தை திட்டமிட வேண்டியதுடன் செயற்திட்ட முன்மொழிவில் குறிப்பிட்டதன் பிரகாரம் அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தோட்ட நிர்வாகம் புல் நாற்றினை நடுவதற்காக வெற்றுக் காணிகளை விடுவிப்பதற்கு சொல்மூலமாக விருப்பம் தெரிவித்திருந்த போதும் தோட்ட நிர்வாகம் எழுத்து மூலம் காணியை விடுவிக்காமை செயற் திட்டத்தை ஆரம்பித்தலில் தாமதம் ஏற்பட்டதற்கு பிரதான காரணமாக இருந்ததாகவும் II ஆம் கட்டத்தின் நிதி ஏயற்பாடுகளில் புல் போக்குவரத்திற்காக லொறி வண்டியொன்றை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளதாகவும், காணிகளை துப்புரவு செய்து வேலிகளை அமைத்தல் ஒழுங்காக கால்நடை வைத்தியரின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அது |

| | | | |
|---|---|---|---|
| | 17 ஏக்கர் அளவில் அதாவது 34 சதவீதம் புல் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், புல் நாற்றுக்கள் விற்பனை செயற்பாடுகளை 2019 மார்ச் மாதத்திலிருந்து ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது. 70 விவசாயிகளுக்கு இடையே ஒரு விவசாயி மாத்திரம் 871 கிலோ கிராம் புல் நாற்றுக்களை மாத்திரம் விற்பனை செய்திருந்தார். | | தாமதத்திற்கு காரணமாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ii) | நுவரெலியா மாவட்டத்தில் புற்கள் வளர்ப்பாளரின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் 32 பாதுகாப்பு குகைகள் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2019 சனவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. அது 2019 நவம்பர் 28 ஆந் திகதி தாமதமாகியமையால் செயற்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற தடையாக இருந்தது. | வழங்கப்படும் நிதி ஏற்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு உயர்ந்த சேவை யொன்றை வழங்கும் வகையில் செயற் திட்டத்தை திட்டமிட வேண்டியதுடன் செயற்திட்ட முன்மொழிவில் குறிப்பிட்டதன் பிரகாரம் அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்திட்டத்தை செயற் படுத்தும் நடவடிக்கைகள் 2019 சனவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அதற்காக நிதிஏற்பாடு யூலை மாதத்தில் கிடைத்திருந்தது. அனைத்து பாதுகாப்பு குகைககளின் நிர்மாண செயற்பாடுகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வும் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (iii) | அம்பகமுவ பிரதேச செயலக பிரிவின் வேன்ஷர் கிராம சேவையாளர் பிரிவில் பால் உற்பத்தியாளர்களின் வருமானத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 908,635 செலவிடப்பட்டு தேவையான இயந்திரங்கள் 2018 நவம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2019 ஆகஸ்ட் மாதத்தின் போது செயற்திட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பிரிவில் அமைந்துள்ள ஆலயக் கட்டிடத்தில் தற்காலிக நடவடிக்கை செயற்பட்டு வந்ததுடன் அதற்காக குறிப்பிடப்பட்ட இடமொன்று இல்லாமை மற்றும் கேள்விக்கு | செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு தடைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இச்செயற்திட்டம் வென்ஷர் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் கிடைத்த முன்மொழிவில் குறிப்பிட்ட செயற்திட்டங்களின் கால சட்டகத்தின் செயற்பாடுகள் நடைமுறை பிரச்சினை காரணமாக வேறுபட்டுள்ளது. நிரந்தர இடமொன்றை தெரிவு செய்யப்படும் வரை தற்காலிகமாக நடாத்திச் செல்வதற்காக ஆலயக் கட்டிடத்தில் இச்செயற் திட்டத்தை தொடர்ந்து வைத்திருப்பதற்காக தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்ற வகையில் வழங்கு வதற்காக போக்குவரத்து செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வாகனமொன்று இல்லாமை காரணமாக செயற்திட்டம் வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு தடையாக உள்ளது. | | |
| (iv) | அம்பகமுவ பிரதேச செயலக பிரிவில் ஜம்புதன்ன கிராம சேவையாளர் பிரிவில் வாசனைத் திரவியங்களை உலர வைத்து பெறுமதி கூட்டுவதன் மூலம் விவசாய உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்திட்டத்திற்காக கிடைத்த நிதிஏற்பாடுகளில் ரூபா 827,310 செலவிடப்பட்டு 2018 திசெம்பர் மாதத்தின் போது உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. செயற் திட்டத்தின் செயற்பாடுகள் 2019 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. சங்கத்தின் 83 அங்கத்தவர்களுக்கு இடையே 05 அங்கத்தவர்கள் மாத்திரம் செயற்திட்டத்தின் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்தனர். 2019 மார்ச் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை செயற்திட்டத்தின் மூலம் ரூபா 19,475 மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந் து ஆகக்கூடிய பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 திசெம்பர் மாதத்தில் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப் பட்டிருந்த போதும், கலக்கும் இயந்திரத்தின் மோட்டாரை பொருத்தும் போது தொழில்நுட்ப தவறொன்று இடம் பெற்றிருந்ததாகவும் மோட்டாரை எடுத்து வந்து பொருத்துதல் 2019 ஏப்ரல் 24 ஆந் திகதி மேற்கொள்ளப் பட்டதாகவும் அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய மேலதிக வருமானமொன்றை உழைக்கும் செயற்பாட்டில் ஈடுபடாமல் உள்ள சிறு குழுக்களில் ஐந்து அங்கத்தவர்கள் செயற் திட்டத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (v) | வலப்பனே பிரதேச செயலகத்தின் தஹிவெல தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் வாழை இலையை பயன்படுத்தி சுற்றாடலுக்கு சாதகமான சுகாதார பாதுகாப்பான ‘‘லன்ஷீட்’’ உற்பத்தி செய்வதற்காக ரூபா 1.74 மில்லியன் செலவிட்டு 2018 நவம்பர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டங்களின் செயற்பாடுகளை தொடர்ந்து | செயற்திட்டத்தினை வெற்றிகரமாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கன்றுகளை பெற்றுக் கொள்வது தாமதமாக இருந்த போதும் மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், உத்தியோகத்தர்களின் முயற்சி மட்டும் இருந்த போதும் குறுங்காலத்தில் கூடுதலான வருமானமொன்று கிடைக்கவில்லையெனவும் |

| | | | |
|---|---|---|---|
| | செல்வதற்கு தேவையான பிரதான மூலப்பொருளான வாழைக் கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக முன்னுரிமை வழங்காமை மற்றும் இயந்திரத்தின் செயற்பாட்டிற்காக தேவையான மின் இயலளவு தொடர்பான கவனம் செலுத்தாமல் அதற்கான கட்டிடத்திற்காக செலவினம் மேற்கொள்ளப் பட்டமையால் செயற்திட்டம் தோல்வியடைந்து பின்னர் செயலற்று போயிருந்தது. | | பிரிவின் மக்களின் அக்கறை குறைவடைவது அவதானிக்கப்பட்டதால் அதன் பிரகாரம் செயற்திட்டம் இப்பிரிவில் செயற்படுத்தப்படாமல் வேறு அக்கறையுள்ள கிராமசக்தி பிரிவிற்கு வழங்குவதன் மூலம் அரசின் நிதியை முறையற்ற பயன்பாட்டினை தவிர்ப்பதற்கு இயலுமை கிடைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (vi) | கொத்மலை பிரதேச செயலகப் பிரிவில் பூண்டுலுஓயா தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் வாழும் ஆடைகள் தைக்கும் கைத்தொழில் ஈடுபட்டுள்ள 35 நலனாளிகளுக்காக ரூபா 1,559,687 செலவிடப்பட்டு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் சங்கத்தின் அபிவிருத்திக்காக நலனாளிகளின் பங்களிப்பொன்றை பெற்றுக் கொள்வதற்காக நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து சங்கத்தின் அபிவிருத்திக்கான நலனாளிகளின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | நலனாளிகளுக்கு வழங்கிய செயற்திட்ட உள்ளீடுகளின் மொத்த பெறுமதி கிராமசக்தி மக்கள் சங்கத்தின் நிதியத்திற்கு தவணைகளாக மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மொத்த பணத்தையும் அறவிட்டதன் பின்னர் சங்கத்தின் உத்தியோகத்தர் களுடன் கலந்துரையாடி உழைத்த வருமானத்திலிருந்து ஏதேனும் தொகையொன்றை சங்க நிதியத்திற்கு அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (vii) | ஹங்குரன்கெத பிரதேச செயலக பிரிவின் பொரமடுல்ல கிராம சேவையாளர் பிரிவின் கற்றாலை உற்பத்தியை மேம்படுத்தும் செயற்திட்டத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 2,589,602 செலவிடப்பட்டிருந்தது. 2019 மார்ச் 12 ஆந் திகதி கற்றாலை உற்பத்தி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், 2019 ஒக்தோபர் மாதத்தில் நாற்றுக்கள் நடப்பட்டிருந்தன. கற்றாலை உற்பத்தி இயந்திரமொன்று ரூபா 120,000 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த | வருமானத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இச்செயற்திட்டம் அடிப்படையாக கற்றாலை கைத்தொழிலுக்கான தமது மேலதிக வருமான மார்க்கமாக கொண்ட முயற்சியாளர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகவும் இச்செயற்திட்டத்தின் ஆரம்ப பிரிவொன்றாக கைவிடப்பட்ட கட்டிடமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு பயிற்சி நிலையமொன்றாக நடாத்தச் செல்லக்கூடிய நிலையம் ஒன்றாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக |

| | | | |
|---|---|---|---|
| | போதும் கைத்தொழிலில் ஈடுபடும் நபர்களுக்கு இயந்திரத்தின் மூலம் கற்றாலை உற்பத்தி செய்வதற்கு மேலதிக தொகையொன்றை செலுத்த வேண்டியிருந்தது. பாரம்பரிய முறையில் கற்றாலை உற்பத்தி 2019 மார்ச் முதல் திசெம்பர் மாதம் மேற்கொண்டு அதில் ரூபா 2,505 தொகையான வருமானமொன்று மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. | | குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2881 கம்பெரலிய செயற் திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் 2348 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 533 செயற் திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன. கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 85 சமய நிலையங்களுக்கு சூரிய சக்தி முறைமை மூலம் மின் உற்பத்தி செய்வதற்காக ரூபா 42,500,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2020 மார்ச் 10 ஆந் திகதி வரை எந்தவொரு செயற்திட்டமும் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | வழங்கப்படும் நிதி ஏற்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு உயர்ந்த சேவை யொன்றை வழங்கும் வகையில் செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இச்செயற்திட்டத்தின் செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு மின்சார சபையுடன் குறித்த சமய நிலையங்களே உடன்படிக்கைகளை மேற் கொள்ள வேண்டியுள்ள தாகவும் அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | நுவரெலியா பிரதேச செயலகத்தின் கொங்கிறீட் வழங்கிய நிறுவனத்தினைக் கொண்டே கொங்கிறீட் தொடர்பான தர பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு தெரிவுக்கு உட்படுத்திய 31 செயற்திட்டங் களுக்காக ரூபா 47,220,750 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பரிசோதனை அறிக்கை சுயாதீன நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரெடி மிக்ஸ் வழங்குகின்ற நிறுவனத்தின் பொறியியலாளரின் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்ட பரிசோதனை அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | அனர்த்த முகாமைத்துவ பிரிவின் செயன்முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மீள்குடியேற்றத்துக்கான வேலைத்திட்டங்கள் மந்தமாக இருந்ததுடன் மீள் குடியேற்ற | அனர்த்தங்களுக்கு உட்பட்ட ஆட்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | வருடாந்த திட்டத்தின் பிரகாரம் மாவட்டத்தில் 144 நிகழ்ச்சித்திட்டங்களையும் 17 செயற்திட்டங்களையும் மேற்கொள்வதற்கு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டதுடன் 2019 |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை 1087 ஆக இருந்த போதிலும், 177 குடும்பங்களுக்காக வீடுகளின் அத்திவாரம் இடும் செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. ஆண்டினுள் மாவட்ட பூராகவும் 144 அறிவூட்டல் மற்றும் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 33 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | | ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நிதிஏற்பாடு கிடைக்காமையால் நிகழ்ச்சிகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய முடியவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | கிராமிய உட்கட்மைப்பு வசதிகள் ந்த்தி செயற் திட்டங்களை டுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த அதில் 140 செயற்திட்டங்கள் து 40 சதவீதமான வேலைகள் பூர்த்தி ப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளின் பேரில் ஆகக்கூடிய பொது மக்கள் சேவை யொன்று வழங்கப்படும் வகையில் செயற் திட்டங்கள் திட்டமிடப்படல் வேண்டியதுடன் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவுவ தற்காக அரசினால் இனங்காணப்பட்டிருப்பதால் அதன் கீழ் கிராமிய வீதிகள், பாலங்கள், நிர்மாணச் செயற்திட்டங்கள் என்பன செயற்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஊ) | மாவட்ட மகளிர் அபிவிருத்தி அலகின் மூலம் 8 நிகழ்ச்சிகளை செயற்படுத்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று இனங்காணப்பட்டிருந்த போதும் செயலாற்றல் அறிக்கையில் 5 நிகழ்ச்சித்திட்டங்களின் செயன் முன்னேற்றம் உள்ளடக்கப் பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சகல செயற்திட்டங்களில் செயன்முன்னேற்றத்தை செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்படல் வேண்டும். | சகல செயற்திட்டங்களுக்கும் நிதிஏற்பாடு கிடைக்காமல் இருந்ததுடன் உத்தியோகத்தரின் முயற்சியால் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஈடுபாட்டுடன் நிதிஏற்பாடுகளை பெற்று செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

**3.9 பெறுகைகள்**

------------------

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் பிராந்திய பெறுகை குழுவொன்றால் பொருட்களுக்காக கூறுவிலை கோரும் போது முத்திரையிடப்பட்ட குறைந்தது 05 கூறுவிலைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. நுவரெலியா பிரதேச செயலகம் அதற்கு முரணாக 05 கூறுவிலைகளுக்கு குறைத்து கோரி பெறுகை செயற்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலகத்தின் அத்தியாவசிய கடமைகளை நடாத்திச் செல்வதற்கு பிராந்திய நிறுவனங களிலிருந்து விலை விபரங்கள் கோரப்பட்டு பெக்ஸ் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மாவட்ட அரச உத்தியோகத்தர்களின் விளையாட்டு சமூக மண்டபத்திற்காக தேவையான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பதிவு தபாலில் 06 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்த போதும் 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதி அளவில் 03 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கிடைத்திருந்தன. இந்த 03 நிறுவனங்கள் கொழும்பு பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் அமைந்திருந்த போதும், நுவரெலிய நீதிமன்ற தொகுதியின் தபால் அலுவலகத்திலிருந்து ஒரே தடவையில் விலை விபரங்கள் தபாலில் சேர்க்கப்பட்டிருந்தன. | பெறுகை செயற்பாடு உயர் வெளிப்படை தன்மையுடன் செயற்படுத்த வேண்டியதாக இருத்தல் வேண்டும். மிகை கொடுப்பனவு பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) இற்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | விலை விபரங்கள் கோருவதற்கு முன்னர் உரிய நிறுவனம் செய்யப்பட்டுள்ள துடன் பின்னர் அதற்கு பொருந்தும் வகையில் ஆவணங்கள் தயாரித்து ரூபா 498,000 பெறுமதியான இப்பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (இ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை குழு நிர்மாணத்திற்காக சமூகமளிக்கும் உத்தியோகத்தர்களால் கையொப்பம் இடப்பட வேண்டிய போதிலும், 04 சந்தர்ப்பங்களில் 04 பெறுகை தீர்மானங் களுக்காக அம்பகமுவ பிரதேச செயலக உத்தியோகத்தர்கால் கையொப்பம் இடப்பட்டிருக்க வில்லை. | பெறுகை செயற்பாடு உயர் வெளிப்படை தன்மையுடன் செயற்படுத்த வேண்டியதாக இருத்தல் வேண்டும். | ஒரே நாளில் பல பெறுகை தீர்மானங்கள் எடுக்கப்படுவதன் காரணமாக சில பெறுகை தீர்மானங்களுக்காக கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. தற்போது அப்பெறுகை தீர்மானங்களுக்காக கையொப்பம் இட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியா பிரதேச செயலகத்தின் 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 09 பொருள் வகைக்குரிய 15 உருப்படிகள் 2019 மே 31 ஆந் திகதி ஏலத்தில் இடப்பட்டிருந்த போதும், கணக்காய்வு திகதியின் 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி வரை குறித்த பொருட்களை பொருட் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏலத்தில் இடப்பட்ட பொருட்களை பொருட் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நுவரெலியா பிரதேச செயலகத்தின் 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 09 பொருள் வகைக்குரிய 15 உருப்படிகள் 2019.05.31 ஆந் திகதி ஏலத்தில் இடப்பட்டிருந்த போதும், குறித்த பொருட்களை பொருட் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு தாமதமானது என ஏற்றுக் கொள்வதுடன் தற்போது 07 உருப்படிகளை பொருட் |

| | | | |
|---|---|---|---|
| | | | பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | நுவரெலியா மாவட்டத்தின் அரச சேவையாளர்களின் விளையாட்டு சமூக மண்டபத்தினை திருத்துவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 578,492 தொகையும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 115,698 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2020 சனவரி 03 வரையிலும் அதன் கூரை திருத்தியமைக்க வேண்டியிருந்தது. | கட்டிடம் திருத்தியமைக்கப்பட்டு உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். | இக்கட்டிடம் மிகவும் பழைய கட்டிடமொன்றாக இருப்பதால் அதன் புராதன பெறுமதியை பாதுகாத்து திருத்தியமைக்கப்பட வேண்டியிருப்பதால் 2020 ஆம் ஆண்டில் கிடைக்கம் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் முழுக் கட்டிடத்தையும் முறையாக திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | அரச சேவையாளர்களின் விளையாட்டு சமூக மண்டபத்தில் விலை மதிக்க முடியாத பெறுமதியுடனான விளையாட்டு உபகரணங்கள் காணப்பட்டன. பொறுப்பாளர் ஒருவர் இல்லாத இந்நிலையத்தில் காணப்படும் விளையாட்டு உபகரணங்களை பாதுகாப்பது தொடர்பாக சேவை உடன்படிக்கையொன்றுக்கு வந்திருக்கவில்லை. | விளையாட்டு சமூக மண்டபம் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த ஒருவரை நியமித்து அதனை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அநேகமான உபகரணங்கள் மிகவும் பழைமையாக இருந்ததுடன் பரீட்சித்து பார்த்த விளையாட்டு உத்தியோகத்தரின் ஆலோசனையின் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | அரச சேவையாளர்களின் விளையாட்டு சமூக மண்டபத்தின் 2018 ஆம் ஆண்டு பொருள் மெய்மையாய்வின் அறிக்கையின் பிரகாரம் காணப்படும் உபகரணங்களில் 07 உருப்படிகளில் 32 பற்றாக்குறைகளும் ஒரு உருப்படியில் 13 மிகைகளும் காணப்பட்டன. | களஞ்சியம் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் பற்றாக்குறை மற்றும் மிகைகளுக்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | அரச சேவையாளர்களின் விளையாட்டு சமூக மண்டபத்தினை அண்மித்து காணப்படும் மூன்று அறைகளை 2018 யூலை 03 ஆந் | கட்டிடத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும் | பொறுப்பாளருக்கு உள்ள இடமாக இருப்பதால் பொறுப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் |

| | | | |
|---|---|---|---|
| | திகதி மாவட்ட செயலகத்தின் சிவில் பாதுகாப்பு பிரிவிற்கு தங்குமிட வசதிகளுக்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் மாதம் முதல் 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை இம்மூன்று அறைகளும் குறைப்பயன்பாட்டில் காணப்பட்டன. | | பின்னர் கையளிக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஊ) | நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அலுவலக வளவில் உள்ள 21 உருப்படிகளில் 357 பற்றாக்குறைகளும், 52 உருப்படிகளில் 640 மிகைகளும் காணப்பட்டன. | பற்றாக்குறை மிகை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பற்றாக்குறை காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த பொருட்களில் அதிகமானவை மாவட்ட செயலகத்தின் களஞ்சியத்தை பரீட்சித்த போதும் இதற்கு முன்னர் சேவை புரிந்த உத்தியோகத்தரிடம் விசாரித்ததன் மூலம் கண்டுபிடிக்க முடியுமாக இருந்ததாகவும் இதற்கு மேலாக களஞ்சியத்தில் உடைந்த பொருட்களுக்கு இடையே இருந்து சில பொருட்கள் இனங்காணக்கூடியதாக இருந்ததாகவும் மிகையாக குறிப்பிடப்பட்ட பொருட்களில் அதிகமானவை மாவட்ட செயலகத்தின் காணப்படும் ஏனைய திணைக்களங்களுக்குரிய பொருட்களாக உறுதிப்படுத்தப் பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே தற்போது பொருட்களுக்காக CIGAS இலக்கமொன்று வழங்கப்பட்டு முறையாக பேணிச் செல்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (எ) | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய அரசின் வீடுகளை பராமரிக்கும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு | தாமதிக்காமல் திருத்த செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் மூலம் அவற்றை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து தற்போது |

| | | |
|---|---|---|
| கையளிக்கப்பட்டிருந்த போதும் செயலகத்திற்குரிய 66 அரசின் வீடுகளில் இரண்டு வீடுகள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அவற்றை உத்தியோகத்தர்களின் பாவனைக்காக வழங்க முடியாமல் காணப்பட்டன. | | மாவட்ட பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.11 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உள்ளக மற்றும் உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றி அமைச்சு செயலாளரின் 2019 மார்ச் 23 ஆந் திகதி 07/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அம்பகமுவ பிரதேச செயலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் ரூபா 30,000 தொகையான பிணையை வைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துரிதமாக பிணை வைப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.12 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) விதை கிழங்குகளை பெற்றுக்கொள்வதற்கான அரசின் பங்களிப்பாக 50 சதவீதம் அல்லது ரூபா 2,375,000 ஆன நிதி ஏற்பாடு 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி கிடைத்திருந்தது. செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் 2018 சிறுபேகத்திற்காக நுவரேலியா மாவட்டத்தின் கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு விதை கிழங்கிற்கான கிரயத்தை 50 | உத்தியோகத்தர் தமது கடமையை முறையாக நிறைவேற்ற வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப புலனாய்வொன்று மேற்கொள்வதற்காக மேலதிக மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

சதவீதத்தினால் குறைத்தல் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் கிழங்கு இறக்குமதியை குறைத்து அன்னியச் செலவணியை சேமித்தல், விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல், வெளிமட உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு C1 இனத்திலான விதைகளை வழங்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாக இனது காணப்பட்டிருந்தது. செயற்திட்ட அறிக்கையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைச்சல் விகிதத்தை தவறாக குறிப்பிட்டிருந்தது. G3 தரத்திலான கிழங்கிற்கு பதிலாக C1 மற்றும் CII விவசாயிகளுக்கு கிழங்கு வழங்கியமையால் ரூபா 73,750 ஆன மிகை கொடுப்பனவொன்ற விவசாய திணைக்களத்தினால் செய்யப்பட்டிருந்தது. விவசாயிகள் தமது விளைச்சலை விதை கிழங்கிற்காக வைத்துக் கொள்ளல் 0 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையான குறைந்த வீச்சில் காணப்பட்டது. நலன்களைப் பெற்றுக்கொண்ட உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களாக இருந்தமை தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்திய விவசாயிகளுக்கு இடையே செயற்திட்டத்தின் கீழ் 30 சதவீதமான நலன்களை மிகவும் சிறிய தரப்பினருக்கு இடையே பகிரப்பட்டிருந்தது. விதை கிழங்குகளை வழங்குவதற்கு விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படையொன்று இல்லாமல் இருந்ததுடன் அவர்களுக்கு அதற்காக போதியளவு காணியொன்றும் இயலுமை உள்ளதா என்பது தொடர்பாக எவ்வித சான்றிதழ் ஒன்றும்

| | | | |
|---|---|---|---|
| | விவசாய உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | கொத்மல பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி நலன் பெறக்கூடியவர்களின் காத்திருக்கும் பட்டியலில் நலனாலிகளின் அடையாள அட்டை இலக்கம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உதவி பெறுவோரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்க வேண்டும். | தற்போது அடையாள அட்டை இலக்கம் உள்ளடக்கப்பட்டு நாளது வரையாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | 2015-2017 ஆண்டுகளில் மேற்கொண்ட பரிசோதனை அறிக்கை குறைபாடுகள் எதுவும் பிரதேச செயலாளர்கள் சமூகமளித்த குழுக்களில் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. 2019 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட 1515 உரித்து சான்றிதழ்களை திருத்தம் செய்யப்பட்டிருந்தன. | நலனாளிகளை மதிப்பீட்டு நியதிகள் இனங்காணப்பட வேண்டும். | வருமானம் அதிகரித்தல், குடியிருப்பை விட்டுச் செல்லல், மரணித்தல், வெளிநாடு செல்லல், உதவிகளை பெறுதல் மற்றும் ஏனைய காரணங்கள் அடிப்படையில் இந்த திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காத்திருக்கும் பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்படாத நபர்களுக்கு சமுர்த்தி உதவிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 47 சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சுற்றறிக்கைகளின் பிரகாரம் முறையாக நிறைவேற்ற வேண்டும். | சமுர்த்தி திணைக்களங்களுக்கு காத்திருக்கும் பட்டியலொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலகத்தின் காத்திருக்கும் பட்டியலான்று காணப்பட்ட போதும் அப் பதிவேடுகளுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. |
| (உ) | நுவரெலியா மாவட்டத்தின் 496 கிராம சேவையாளர் பிரிவுகளில் 68 பிரிவுகளில் எந்த நபருக்கும் சமுர்த்தி உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை. அப்பிரிவுகளில் காத்திருக்கும் பட்டியலில் 1,880 நபர்கள் உள்ளடக்கப்பட்டு காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சுற்றறிக்கைகளின் பிரகாரம் முறையாக நிறைவேற்ற வேண்டும். | விண்ணப்பித்த சகல நலனாளிகளுக்கும் உதவி வழங்கல் மேற்கொள்ளப்படாததுடன் இரண்டாவது கட்டத்தில் அந் நலனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்படுவதாக தலைமை அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருத்தது. |
| (ஊ) | மாவட்டத்தில் சமுர்த்தி உதவி காத்திருக்கும் பட்டியலில் குறிப்பிட்ட வரிசைக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்படடிருந்த | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சுற்றறிக்கைகளின் பிரகாரம் முறையாக | தெரிவு செய்யப்பட்ட அனைவருக்கும் கொடுப்பனவு செய்தல் இடம்பெறவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | 1,482 சந்தர்ப்பங்கள் காணப்படடன. காத்திருக்கும் பட்டியல்களுக்கு புறம்பாக கொடுப்பனவு செய்தல் 1 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வியாபித்துக் காணப்பட்டன. | நிறைவேற்ற வேண்டும். | என்பதுடன் பிரிவுகளில் உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்று மூலம் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. அப் பரிந்துரைகளின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் அத்திணைக்களத்தின் மூலம் அனுப்பி வைக்கப்படும் பதிவேட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப் பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (எ) | விவசாய உற்பத்தி விற்பனை நிலையமொன்றாக நிர்மாணிக்கப்பட்டுள்ள லெமசூரிய இல்லகொல்ல விற்பனை கட்டிடத்தினுள் கணக்காய்வு செய்யப்பட்ட 2020 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் சலூன் வியாபாரமொன்று மற்றும் சில்லறை விற்பனை நிலையமொன்றிலிருந்து வாடகை அறிவிடப்படாமல் இருந்ததுடன் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | முறையாக நடவடிக்கை எடுத்து கட்டிடப் பிரதேசத்தின் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். | லெமசூரிய ஹப்பரவர (இல்லகொல்ல) சமுர்த்தி விற்பனை கட்டிடம் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (எ) | பிரதேச செயலக மட்டத்தில் சுழற்சி கடன் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள மதியுரை வழிகாட்டியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் 04 பெண்களுக்கு மாத்திரம் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதி வரை அலுவலகத்திற்கு 10 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் கடன் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் கடன் வழங்குவது செயற்திறனாக செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 ஒக்தோபர் 21 ஆந் திகதி வரை கிடைக்கப்பெற்ற கடன் விண்ணப்பதாரிகளுக்கு விரைவில் சுழற்சிக்கடன் வழங்குவதாகவும் 2018 ஆம் ஆண்டில் 15 பேருக்கு சுழற்சி கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 யூலை 17 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் 8 ஆம் பந்தியின் அறிவுறுத்தலின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் களுக்கான வீடொன்று நிர்மாணம் மாத்திரம் நிலைபேறான இலக்கை பூர்த்தி செய்யும் செயற்திட்டமாக இனங் காணப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மாவட்ட செயலகத்தினால் இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்து வதற்காக தேவையான குறியீடுகளை நிறுவனத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதலின் செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பிடப்படாமல் இருந்ததுடன் ஆண்டில் நிறைவேற்றிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் செயன் முன்னேற்றம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு சீராக்கப்பட்டு செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி அடைந்து கொள்ளும் போது உரிய செயற்பாடு களை ஒழுங்குபடுத்து வதற்கான தேவையான குறிப்புகள் இனங்காணப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வறுமையை ஒழிக்கும் நோக்கில் திட்டவட்டமான செயற்திட்டங்கள் இனங்காணப்படாமல் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் கம்பெரலியா மொத்த செயற்திட்டங்கள் 3231 இல் வறுமையை ஒழித்தல் என செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை சரியாக அமைத்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிராமிய வீதிகள், பாலங்கள், நிர்மாணம், விஹாரைகள், பள்ளிவாயில்கள் அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி சங்கங்களை பலப்படுத்துவதனூடாக கிராமிய ரீதியில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதால் மக்களுக்கு தமது வருமானத்தை உழைக்கும் செயற்பாடுகளை விட இலகுவாக நிறைவேற்ற முடியுமாக இருப்பதுடன் அதன் ஊடாக குடும்பங்களுக்கு வருமானம் உழைப்பதன் மூலம் வறுமைக்கு தீர்வு காணலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (இ) | வாழ்வதற்காக காணி வழங்குதல் நிலைபேறான இலக்கினை நிறைவேற்றவுதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் திட்டவட்டமாக இலக்குகளை தாபித்தலொன்ற இடம்பெற்றிருக்கவில்லை. | முறையாக இலக்குகள் தீர்மானிக்கப்பட வேண்டும். அவை அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும். | இங்கு பிரதேச செயலகத்தின் மூலம் அனுமதிப்பத்திரம் வழங்குவதன் மூலம் காணி பகிர்ந்தளித்தல் என கருதப்பட்டிருந்ததுடன் அங்கு பிரதேச செயலகத்தின் மூலம் இனங்காணப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப்பட்ட முறைமையின் பிரகாரம் செயலாற்றல் மதிப்பீடு மேற்கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | பசியால் வாடுவோரை இல்லாமல் ஆக்குவதற்காக 600 பெண்கள் இலக்காக கொண்டு சிறிய மற்றும் நடத்தர அளவிலான வியாயத்திற்கான தொடர்பு படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் 52 பெண்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. | தாபிக்கப்பட்ட இலக்குகள் ஆண்டில் நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அடைந்து கொள்ளக்கூடிய இலக்குகளை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந் நிகழ்ச்சித்திட்டம் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் அங்கு பெண்களை உரிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு அழைத்த போதும் சமூகமளித்த அளவின் அடிப்படையில் 487 பெண்களுக்காக நிகழ்ச்சத்திட்டம் செயற் படுத்தப்பட்டுள்ளதாக |

| | | | |
|---|---|---|---|
| | | | குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | விசேட தேவையுடைய பிள்ளைகளை பாதுகாத்தல் மற்றும் பயிற்சியளித்தல் என்பவற்றிற்கான ஆசிரியர்களை பயிற்சி யளித்தல் இலக்கிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | முறையாக இலக்குகள் தீர்மானிக்கப்பட வேண்டும். அவை அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும். | இது அரச சார்பற்ற அமைப்புக்களில் நிதி ஏற்பாடுகளின் பேரில் மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டதுடன் எதிர்வரும் நிகழ்ச்சத் திட்டங்களுக்காக உரிய நிறுவனங்களிடமிருந்து பணம் கிடைக்கப் பெறாமையால் மேற்கொள்ள முடியாமல் இருந்ததுடன் அந் நிகழ்ச்சியை இவ்வாண்டில் அரச சார்பற்ற அமைப்புகளின் உதவி அடிப்படையில் மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஊ) | பொருளாதார அபிவிருத்தி இலக்கை நோக்கி அடையும் போது 60 புதிய செயற் திட்டங்களை ஆரம்பித்தல், முன்னர் காணப்பட்ட 100 செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், 40 பேருக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்குதல், 40 பேருக்கு வர்த்தக சந்தைகளை தொடர்பு படுத்துவதற்கு இலக்கிடப் பட்டிருந்தது. பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்த போதும் இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட வியாபாரங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையாக இலக்குகள் தீர்மானிக்கப்பட வேண்டும். அவை அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை |
| (எ) | 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையில் காணப்படும் வறுமையை முழுமையாக இல்லாமல் செய்தல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கமாக முன்னுரிமையாக கொண்டு கிராம சக்தி மக்கள் வியாபாரம் நுவரெலியா மாவட்டத்தில் 05 பிரதேச செயலக பிரிவுகளில் முதலாம் கட்டத்தின் கீழ் 2018 ஆம் | நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிராம சக்தி சங்கங்கள் முதலாம் கட்டத்தின் கீழ் 16 சங்கங்களும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 45 சங்கங்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

ஆண்டில் 15 சங்கங்களும் அதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் 45 சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) | நுவரெலியா மாவட்டத்தின் 05 பிரதேச செயலகங்களில் பிரிவுகளில் ஒட்டுமொத்த சனத்தொகைக்கு ஒப்பாக சங்க அங்கத்தவர்கள் 0.75 சதவீதமான முதல் 43 சதவீதம் வரையான வீச்சில் காணப்படும் சங்கங்களின் எண்ணிக்கை 49 ஆக இருந்தன. கிராம மக்கள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் காண்பிக்கும் இணக்கப்பாடு கீழ் மட்டத்தில் காணப்பட்டன. | நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டில் ஒரு சங்கத்திற்கு ரூபா 500,000 வீதம் 07 சங்கங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,500,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு கணக்காய்வு திகதியான 2020 சனவரி 16 ஆந் திகதி வரை பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | இயலளவு அபிவிருத்தி நிதியம் (இயலளவு அபிவிருத்தி) இற்காக ரூபா 300,000 தொகை சங்கமொன்றுக்கு ஒதுக்கப் பட்டிருந்ததுடன் 2 கிராம சக்தி சங்கங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 600,000 நிதி ஏற்பாடுகளிலிருந்து எந்த பணமும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. 07 சங்கங்களின் நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு மொத்த நிதி ஏற்பாடு களிலிருந்து 1 சதவீதம் முதல் 22 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சொன்றில் | நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணப்பட்டது. | |
| (iv) | கிராமிய மக்கள் வியாபாரத்தின் பிரயாண வழிகள் ‘‘கைநூலின் இரண்டாம் அத்தியாயத்தின் பிரகாரம் சங்கத்தை நிறைவேற்றுக் குழுவின் உதவிக்கு 07 நிரந்தர குழுக்கள் தாபிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. முதலாம் கட்டத்தில் 15 சங்கங்களுக்கு இடையே 14 இளைஞர்களுக்கும் 10 சங்கங்கள் இயலுமை அபிவிருத்தி மற்றும் தொடர்பாடல் குழுவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டாம் கட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 41 சங்கங்ளுக்கு இடையே 08 சங்கங்களின் இயலளவு அபிவிருத்தி மற்றும் தொடர்பாடல் குழுவும் 05 சங்கங்கள் இளைஞர் கிளைகளும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | கிராமசக்தி மக்கள் வியாபாரத்தில் முதலாம் கட்டத்தில் 14 சங்கங்களுக்கு இடையே 05 சங்கங்கள் தாபிக்கப்படாமல் இருந்ததுடன் இரண்டாம் கட்டத்தில் 41 அங்கத்தவர் களுக்கு இடையே 22 சங்கங்கள் சிறிய குழுவினதும் 30 சங்கங்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபிக்கப்பட்ட இலக்குகளை ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அடையக்கூடிய இலக்குகளை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**5. நல்லாளுகை**

**பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 இல் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் தொடர்பான சட்டத்தின் 25(1) பிரிவின் பிரகாரம் தகவல் கோரல் வேலை செய்யும் 14 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நுவரெலிய பிரதேச செயலகத்தின் அந் நியமங்களுக்கு இணங்க செயற்படாத 05 சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டன. | தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக்கொள்வதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அறியும் சட்டத்தின் 25(1) இன் கீழான வேண்டு கோளுக்காக பதில் வழங்குமாறு மீண்டும் ஒரு முறை உரிய பிரிவுத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் உடனடியாக அதற்கான பதிலை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2018 மார்ச் 21 ஆந் திகதிய 02/2018(1)3 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கணக்குச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் பொது மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளுக்காக தீர்வு வழங்குவதற்கான முறையான பொறிமுறையொன்றை கட்டியெழுப்புவதும் அத்தகவல்களை அறிக்கையிட்டு அளவிடுவதற்கு நடைமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதும் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் மனுக்கள் தொடர்பாக தகவல்களை அறிக்கையிடுவதற்கு முறைப்பாடுகள் மற்றும் மனுக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்படாமல் இருந்தது. நடவடிக்கைகள் தொடர்பாக இறுதி முறைப்பாடு தொடர்பாக செயன்முன்னேற்ற | சுற்றறிக்கை நியமங்களுக்கு இணங்க மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரணையின் பிரகாரம் அவை கிடைக்கப்பெறும் வரிசையில் முறைப்பாடுகள் மற்றும் மனுக்கள் பதிவேடொன்றை தயாரிப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போது முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| அறிக்கை மாத்திரம் நாளதுவரையாக்கப்பட்டிருந்தது. மேலும் ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தில் 2019 யூலை மாதத்தின் பின்னர் கிடைத்த முறைப்பாடுகள் பதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் இருந்ததுடன் வெவ்வேறு தரப்பினர்களினால் முன்வைக்கப்பட்டிருந்த 07 முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**6. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | -------------------------------------- | ------------------ | ---------------------------- |
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியின் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்று கிடைக்கும் வகையில் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டினுள் 14 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதும் அதில் 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இலக்காக கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களாக இருந்தன. | சுற்றறிக்கை நியதிகளின் பிரகாரம் மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள மனித வளத் திட்டம் வேறு மாதிரியொன்றில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டு முதல் பொது நிர்வாக சுற்றறிக்கை மாதிரியின் பிரகாரம் மனித வளத் திட்டம் தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அலுவலக உத்தியோகத்தர்களின் பயிற்சி கோவையில் இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக ஈடுபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லையெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |